Registered as a NewsPaper

விலை ரூபா-8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 திருவள்ளுவர் ஆண்டு- 2036 தை-07 20-01-2005 வியாழக்கிழமை ஓசை -337



கணேசா நகையகம்

தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123. பஜார் வீதி. வவுனியா. T.P.-024-2222464

இல:194. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம். T.P.-021-2225987

(சி-11118)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதில் மிகுந்த அக்கறையாகவுள்ளோம்

## அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் உடனான சந்திப்பின் பின் ஐ.நா. பிரதிநிதி

**சுனாமியால் இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எவ்வாறு உதவ முடியுமோ அதனைச் செய்வதில் நாங்கள் அக்கறையாகவுள்ளோம். இவ்வாறு ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதி கிமால் மோர்ஜானி தெரிவித்துள்ளார். நேற்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடிய பின் ஊடகத்திற்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.**



இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்; விடுதலைப்புலிகளுக்கும் எமக்கும் நீண்டகால தொடர்புகள் உள்ளன. சுனாமி பேரழிவினால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களைப் பற்றி எமக்கு புலிகள் அறிவித்துள்ளனர். அதை நாங்கள் மிகவும் அவதானித்துள்ளோம். இந்த அனர்த்தங்களுக்கு எம்மால் என்ன செய்ய செய்யமுடியும் என்பதை நாங்கள் இப்பொழுது ஆராய்ந்து வருகிறோம். இலங்கையில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு எம்மால் எவ்வாறு உதவ முடியுமோ அதை செய்வதில் நாங்கள் மிக அக்கறையாகவுள்ளோம். இன்று நாங்கள் பல இடங்களுக்குச் சென்று நேரில் அழிவுகளைப் பார்வையிட்


(12 ஆம் பக்கம் பார்க்க)

## சுனாமி அனர்த்த நிதிக்கு மூன்று லட்சம் ரூபா உதவி

(அலுவலக செய்தியாளர்)

சுனாமி அனர்த்த நிதிக்கு பெருமளவிலான மக்கள் நிதியுதவியினை நல்கிவருகின்றனர். புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்த திருநாவுக்கரசு என்பவர் 3 இலட்சம் ரூபா பணத்தினை சுனாமி அனர்த்த நிதிக்கென விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் வைத்து தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களிடம் நேற்றுப் பிற்பகல் 1.15 மணிக்கு கையளித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)



## -மட்டு- அம்பாறை மாவட்டங்களில்-

## சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டோரில் மூன்றிலொரு பகுதியினருக்கே நிவாரண முத்திரை

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரசினால் வழங்கப்படவுள்ள நிவாரண முத்திரைகள் மட்டு-அம்பாறை மாவட்டங்களுக்கு போதியளவு கிடைக்கவில்லையென சிவில் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அடுத்தமாதம் முதல் வாரத்தில் இந்நிவாரணத்திட்டம் அமுலுக்கு வரவுள்ள போதிலும் சிவில் அதிகாரிகளால் எதிர்பார்க்கப்பட்டதில் மூன்றிலொரு பகுதியாயினும் அனுப்பிவைக்கப்படவில்லையென மாவட்டச் செயலகங்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி வெளிநடப்புச் செய்தபோதும் அவசர நிவாரணப்பணிக் கூட்டம் நடைபெற்றது

யாழ்.செயலகத்தில் நேற்று மாலை இடம்பெற்ற சுனாமி அவசர நிவாரணப்பணி கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் கலந்துகொள்ள வருகை தந்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஈ.பி.டி.பி அமைப்பின் பிரதிநிதிகள் வெளிநடப்புச் செய்த போதும் ஏற்கனவே வகுக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் அக் கூட்டம் இடம்பெற்றது.

இக் கூட்டத்தில் யாழ்.மாவட்ட படைகளின் கட்டளைத் தலைமையகத்தைச் சேர்ந்த உயரதிகாரிகள் மற்றும் யாழ். மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

அத்துடன் அரச திணைக்களங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களது

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சுனாமியால் பாதிப்புற்றோருக்கு சிலிங்கோ பொருட்கள் வழங்கல்

### கப்டன் போயா கொட கையளித்தார்

(அலுவலக செய்தியாளர்)

சிலிங்கோ நிறுவனத்தினரால் நிறுவனத் தலைவர் லலித் கொத்தலாவலையினால் வடபகுதியில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப்பொருட்களும் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பொருட்களைக் காணாமற்போன படைவீரர்கள் சங்கத் தலைவர் ஈ.எம். நாணயக்கார,விடுதலைப்புலிகளினால் விடுதலை செய்யப்பெற்ற சகாரவர்த்தனா கப்பலின் கப்டன் (12 ஆம் பக்கம் பார்க்க)



## அடுத்த ஐந்து வருடகாலத்திற்கு தேர்தல் எதுவும் நடைபெறாது

### -சனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

நாட்டில் அடுத்து வரும் ஐந்து ஆண்டு காலப்பகுதியில் தேர்தல் நடைபெறாது என சனாதிபதி தெரிவித்துள்ளார். நேற்று அம்பாந்தோட்டையில் நடைபெற்ற புனர்அமைப்பு பணிகளில் பங்கேற்று உரையாற்றிய அவர்

தேர்தல் ஒன்று நடைபெறுமானால் அதில் கட்சிக்கு முன்னால் புள்ளடி இடாமல் நாட்டுக்கு முன்னால் புள்ளடியிட வேண்டிய காலம் ஏற்பட்டுள்ளது. சுனாமி பேரலைப்பாதிப்பின் பின்னர் நாட்டிலுள்ள அனைத்து கட்சித் தலைவர்களும் தமது

(12 ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் வாகனத்தால் மோதி பொதுமகனை கொலை செய்தமைக்கு எதிராகப் போராட்டம்

### -துப்பாக்கியை நீட்டிய சிப்பாய்கள் மீது தாக்குதல்

கொடிகாமத்தில் படையினரின் வாகனத்தால் மோதிபொதுமகன் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்து பொது மக்கள் நேற்று போராட்டம் நடத்தினர். கொடிகாமத்திலிருந்து மிருசுவில் வரை வீதித்தடைகளை ஏற்படுத்தி மக்கள் இப்போராட்டத்தில் ஈடுபட்டனர் நேற்று முன்தினம் மிருசுவில் பளைய வாய்க்கால் பகுதியில் சிறிலங்கா படைகளின் வாகனத்தால் மோதிக்கொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### புத்தகம் வெளிவந்து விட்டது

நீருயிர் வளத் தொழிநுட்ப பாடத்தை ஒரு பாடமாகக் கற்கும் 10ஆம் 11ஆம் ஆண்டு மாணவர்கள் நலன் கருதி வினா விடை நூல் அறிவு அமுது புத்தக சாலை, கிளிநொச்சியில் தேவைப்படுபவர் பெற்றுக்கொள்ளலாம் இதன் ஆசிரியர் தாவீதுராசா, டேவிற் என்பவரால் எழுதப்பட்டது. (5574)

### உடன் தேவை

கிளிநொச்சி, டிப்போச்சந்தி திருநகருக்கு இடைப்பட்ட பகுதியில் A/L வகுப்பு (பௌதிகவியல்) நடத்துவதற்கு வீடு அல்லது அதற்கு அமைவான இடம் உடன் தேவை தொடர்பு:- ச.சதீஸ் குமார், நிறைமதி நகைமாடம், கந்தசாமி கோவில் முன்பாக கிளிநொச்சி. (சி-5564)

### வீடு வாடகைக்கு

இல.09 கனகபுரம், கிளிநொச்சியில் அமைந்துள்ள, அரச அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு பொருத்தமான வீடொன்று வாடகைக்கு உண்டு.தொடர்புகளுக்கு மாயவன்அரிசி ஆலை, கனகபுரம் கிளிநொச்சி. அல்லது. T.P. 2225475 தொடர்பு கொள்ளவும். (5567)

### தவறிவிட்டது

செல்லையா சதீஸ்குமார் ஆகிய எனதுதே.அ.அ. 7805152236V - DLA005485941 நிரந்த பயண அனுமதி அட்டை 121100 கிபேர் சுடன் கிளிநொச்சிக்கும் புளோப்பளைக்கு மிடையில் 18.01.2005 தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பளை வைத்தியசாலை, காவல் துறை கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரிபணிமனை, கிளிநொச்சியில் ஒப்படைக்கவும். தகவல் செ.சதீஸ்குமார். (5576)

### வைத்தியம்

வாதநோய், நரம்புத்தளர்ச்சி நோய்களுக்கு உட்பட்டவர்களுக்கு அவர்களின் இல்லங்களுக்கு நேரடியாகச் சென்று நவீன ஆயுர்வேத முறைப்படி சிகிச்சையளிக்கப்படும். டாக்டர் திருலோகமூர்த்தி, டீ.ஏ.எம். (இலங்கை) சுதேச மருத்துப் பட்டதாரி கௌரிகிளினிக் கண்ணன் கோவில் முன்பாக கிளிநொச்சி. நகர். (5571)

### பொருட்கள் வழங்கல்

சுனாமி பேரலையால் பாதிப்படைந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் கிசிச்சை பெற்ற மக்களுக்கு பதினையாயிரம் ரூபா (15000) பெறுமதியான பால்மா வகைகளும்,உடுபுடவைகளும் வட்டக்கச்சி ஸ்ரீரங்கநாதர் ஆலய நிர்வாகத்தினரால் வழங்கப்பட்டது.

— சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் —

# கற்றல் செயற்பாடுகளை மேம்படுத்த முல்லை. பட்டதாரிகள் சங்கம் நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

முல்லைத்தீவு மாவட்ட பட்டதாரிகள் சங்கம் கடல் கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட முல்லைத் தீவுப் பகுதி மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை மேம்படுத்துவதற்காக மிகவும் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தை துரிதப்படுத்துவதற்காக கடந்த17.01.2005 அன்று தொடக்கம் முல்லைத்தீவு மகா வித்தியாலத்தில் கல்விகற்ற மாணவர்களின் விபரம்,முல்லை தீவு றோமன் கத்தோலிக்க வித்தியாலய மாணவர்களின் விபரம், கள்ளப்பாடு பாடசாலை மாணவர்களின் விபரம் என்பன வற்றை திரட்டுவதுடன் அவர்களுக்கான சீருடை அளவுகள் என்பவற்றையும் எடுத்து வருகின்றனர்.

மேலும் மாணவர்களின் கற்பித்தல் தொடர்பான நூல்களை தமிழீழ மாணவர் அமைப்புடன் இணைந்து யாழ். மாவட்டத்திலிருந்து பெற்று வழங்குவதுடன் அங்குள்ள ஆசிரியர்களையும் அழைத்து வந்து பாடவிதான செயற்பாடுகளை வழங்க வுள்ளதாகவும் பட்டதாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (கு, 20)


- முல்லைத்தீவுப் பகுதியில் -

# மத்திய சாயி ஆச்சிரம நிதியுதவியுடன் 200 தற்காலிக வீடுகள் அமைக்கப்படும்

(அலுவலக செய்தியாளர்)

கடல் கொந்தளிப் ^னால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவுப் பகுதியில் மக்களை மீளக் குடியமர்த்துவதற்கு மத்தியசாயி ஆச்சிரம நிலையத்தின் நிதியுதவியுடன் 200 தற்காலிக வீடுகள் அமைத்து கொடுக்கப்படவுள்ளன.

அதன் மதிரி வீடு ஒன்றினை நிகொட் நிறுவனத்தின் வளாகத்தில் அமைத்துள்ளனர். இவ் வீடுகள் யாவற்றையும் நிகொட் நிறுவனமே



அமைத்து கொடுக்கவுள்ளது.

ஒரு வீடும் அதற்கு அருகில் சமையலுக்கென கொட்டகையும் அமைத்து பாதுகாப்பான முறையில் இவ் வீடுகளை அமைக்க ஏற்பாடு செய்துள்ளன. இவையாவும் மிக விரைவில் அமைத்து மக்களுக்கு கையளிக்கப்படும் என அந்நிறுவனம் தெரிவித்துள்ளது. (கு.20)

# முல்லை மகாவித்தியாலயத்தில் ஏனைய பாடசாலை மாணவர்கள் பணி

(அலுவலக செய்தியாளர்)

கடல் அனர்த்தத்தால் முற்றாக சேதமடைந்துள்ள முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தை மீண்டும் இயங்கச் செய்வதற்கான முன் ஆயத்த வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இந்த புனரமைப்புப் பணிகளை முல்லைத்தீவுப் பகுதியிலுள்ள பாதிப்புக்குள்ளாகாத ஏனைய பாடசாலைகளின் மாணவர்களுக்கும்,



ஆசிரியர்களும் அயல் பாடசாலையை இயங்கச் செய்ய வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் தாமாக முன்வந்து புனரமைப்புப் பணிகளைச் செய்து வருகின்றனர்.

இப்பணியில் நேற்றையதினம் மு/செம்மலை மகாவித்தியாலய சாரண மாணவர்களும் ஏனைய மாணவர்களும் சாரணப் பொறுப்பாசிரியர் த.மதியழகன் தலைமையில் துப்புரவுப் பணிகளை மேற்கொண்டனர். (கு,20)

# 5 சிறுவர்களின் சடலங்கள் மீட்பு

(அலுவலக செய்தியாளர்)

முல்லைத்தீவுப்பகுதியில் சுனாமி அனர்த்தத்தால் உயிரிழந்த மேலும் ஐந்து சிறுவர்களின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அவ்விடத்திலேயே தகனம் செய்யப்பட்டுள்ளன.

மேற்படி சடலங்கள் நேற்று முன்தினம்மாலைவேளையிலேயே மீட்புப் பணியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டு தகனம் செய்யப்பட்டுள்ளன.தொடர்ந்து மீட்புப்பணிகளும் ,புனரமைப்புப் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

இச்சடலங்களை மனித நேய கண்ணிவெடியகற்றும் பிரிவினர் கரைச்சி குடியிருப்புப் பகுதியில் வெடிபொருட்கள் இருக்கின்றதா எனப் பரிசோதனை நடாத்திய வேளையிலேயே கண்டுள்ளன. இச்சடலங்களின் தோற்றத்தைக் கொண்டு 6 தொடக்கம் 8 வயது மதிக்கக்கூடிய சிறுவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளது. (20,கு)

# இடைத்தங்கள் முகாம்கள் 18 அமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டைத்தாக்கிய "சுனாமி" ஆழிப் பேரனர்த்தங்களால் இடம்பெயர்ந்து பாடசாலைகளில் அமைக்கப்பட்டிருக்கும் அகதிமுகாம்களில் தங்கியிருக்கும் 1933 குடும்பங்களைத் தற்காலிகமாகக் குடியமர்த்துவதற்காக 18 இடைத்தங்கல் முகாம்கள் அமைக்கப்பட்டுவருகின்றன.

இடம் பெயர்ந்த மக்கள் தங்கியிருப்பதால் இயங்காதுள்ள பாடசாலைகளை அவற்றின் வளமையான கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுக்கு ஒப்படைக்கும் நோக்குடனேயே இவ்வாறான இடைத் தங்கல் முகாம்களை அமைக்க தமிழீழ விடுதலைப்புலிகளின் சுனாமி அனர்த்த நிவாரண ஒருங்கிணைப்புச் செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

யுனிசெவ், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதுவராலயம் (யு.என்.எச்.சி.ஆர்.) பட்டினிக்கு எதிரான இயக்கம் சர்வதேச செஞ்சிலுவைகுழு, உட்பட பல் வேறு உதவும் சர்வதேச நாடுகளும் இணைந்து இவ்வாறான இடைத்தங்கல்முகாம்களுக்கும் குடிநீர், மலசலகூடம், கல்வி, சுகாதாரம் போன்ற வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கவுள்ளனர்.

இவ்வாறான இடைத்தங்கல் முகாம்கள் ய'ாவும் யாழ்.வடமராட்சிப்பகுதியிலேயே அமைக்கப் படவுள்ளன. (33)

## சாவு அறிவித்தல்

### செல்லையர் பாக்கியம்

வறுத்தலை விளானைப் பிறப்பிடமாகவும் உருத்திரபுரம் சிவநகர் இல.2ஐ வதிவிடமாகவும் கொண்ட செல்லையா பாக்கியம் அவர்கள் 19.01.2005 காலமாகிவிட்டார் அன்னார் செல்லையாவின் அன்பு மனைவியும், இராஜேஸ்வரி, பத்மவதி சர்வேஸ்வரி(சுவிஸ்) ஆகியோரின் அன்புத்தாயாரும், சந்திரகாந்தன் (பிரான்ஸ்), சிவகுமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் கயூட்சன், துர்சிகா, கயாசகானா, சங்கமன், சாளங்கன் ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார். அன்னாரது இறுதிக் கிரியைகள் 20.01.2005 இன்று பி.ப.5மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உருத்திரபுரம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்:-
**பிள்ளைகள்**

(5579)

## சாவு அறிவித்தல்




### அருளம்பலம் சிவபாதசுந்தரம்

வேலணையை பிறப்பிடமாகக் கொண்டவரும் இல. 19கட்சன் வீதி, வட்டக்கச்சியில் வசித்தவருமாகிய அருளம்பலம் சிவபாதசுந்தரம் 19. 01. 2005 அன்று காலமானார். அன்னார் காலம் சென்ற அருளம்பலம் நாகம்மா ஆகியோரின் அன்பு மகனும், காலம் சென்ற முத்துத்தம்பி கனகம்மா ஆகியோரின் மருமகனும் காலம் சென்ற பாலாம்பிகையின் அன்பு கணவரும், ரவிந்திரன் (பிரான்ஸ்), தமிழ்ச் செல்வன் (கொழும்பு), ராஜனி (வட்டக்கச்சி), கிருபாகரன் (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரிந்தா (பிரான்ஸ்), கேதீஸ்வரி (கொழும்பு) சுந்தரலிங்கம் (வட்டக்கச்சி), பிரிதா (வேலணை) ஆகியோரின் மாமனாரும், நவரெத்தினவதி (வேலணை),சிவஞ்ஞானம் (கொழும்பு), சோமஸ்கந்தன் (முள்ளியவளை), காலம் சென்ற ரெங்கன்சிதா, லெச்சுமி (கொழும்பு) ஆகியோரின் அன்பு சகோதரனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 20. 01. 2005 பி. ப. 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மம்மில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

தகவல்:-
**மகன் தமிழ்ச்செல்வன். (செல்வன்)**

(5578)



பாக்தாத்தில் அவுஸ்திரேலிய தூதுரகமருகே நேற்று இடம்பெற்ற கார்க்குண்டுத்தாக்குதலையடுத்து மீட்பு நடவடிக்கையில் ஈடுபடும்அமெரிக்கா மற்றும் அவுஸ்திரேலியப் படையினரையும் சம்பவ இடத்தில் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடும் உலங்கு வானூர்தியையும் தூதுரக பாதுகாப்பில் ஈடுபட்டுள்ள படையினரையும் படங்களில் காண்க.

# பாக்தாத்தில் தொடர் தாக்குதல்கள் 12 பேர் உடல்சிதறிப் பலி; பலர் படுகாயம்!

## -அவுஸ்திரேலிய தூதரகம் அருகேயும் தாக்குதல்

(பாக்தாத்)

**ஈராக் தலைநகர் பாக்தாத்தில் நேற்றைய தினம் தீவிரவாதிகள் நடத்திய பல்வேறு தாக்குதல்களில் சுமார் பன்னிரண்டு பேர் கொல்லப் பட்டும் பலர் காயமடைந்தும் உள்ளனர். பொதுத் தேர்தலை தடுக்கும் வகையிலேயே இந்தத் தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன.**

பாக்தாத்திலுள்ள அவுஸ் திரேலிய தூதரகம் அருகே நடை பெற்ற கார்க் குண்டு வெடிப்பில் இரு ஈராக்கியர்கள் கொல்லப் பட்டனர். மேலும் இரு அவுஸ்தி ரேலிய படையினர் உட்பட எட்டுப் பேர் காயமடைந்தனர். தூதரகத் திற்கும் சிறிதுசேதமேற்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

மேலும் இந்தச் சம்பவம் இடம் பெற்று 30 நிமிடங்களில் கிழக்கு பாக்தாத்திலுள்ள பொலிஸ் நிலையமொன்றருகே நடத்தப்பட்ட மற்றொரு கார்க் குண்டுத் தாக்கு தலில் 6 பேர் கொல்லப்பட்டும் பத்துக்கும் மேற்பட்டோர் படு காயமடைந்தும் உள்ளனர்.

பாக்தாத் விமானநிலைய நுழைவாயில் பகுதியில் இடம் பெற்ற மற்றொரு தாக்குதல் சம்ப வத்தில் மூன்று ஈராக்கியப் படை யினர் கொல்லப்பட்டனர். வடக்கு பாக்தாத்தில் இடம்பெற்ற மற் றொரு சம்பவத்திலும் ஒருவர் கொல்லப்பட்டும் இன்னுமொருவர் காயமடைந்தும் உள்ளதாக அறி விக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்ற தாக்குதல்களால் பாக் தாத்தில் அமெரிக்கப் படையினர் பெரும் திண்டாட்டமடைந்துள் ளனர்.

சனவரி 30 ஆம் திகதி ஈராக் பொதுத் தோர்தல் நடைபெற வுள்ள நிலையில் தலைநகர் பாக் தாத் உள்ளிட்ட முக்கிய பகுதியில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் தீவிரவாதிகளின் அதி கரித்த தாக்குதல்கள் அமெரிக்கப் படையினரை அச்சத்திற்குள்ளாக் கியுள்ள அதே வேளை தேர்தலை நடத்துவதென்பதும் பெரும் நெருக்கடியானதொரு நிலைக்கு இட்டுச் சென்றுள்ளமை குறிப்பிடத் தக்கது.

### 10 இலட்சம் பேர் பிரவேசம்

வருடாந்தம் அமெரிக்கா மெக் சிக்கோ எல்லைப்புறத்தினூடாக சுமார், 10 இலட்சம் பேர் சட்டவி ரோதமாக அமெரிக்காவிற்குள் பிரவேசிப்பதாக தெரிவிக்கப் படுகின்றது. இவர்கள் அரிசோனா பகுதியிலுள்ள 30 மைல் நீள முள்ள எல்லைப்புறம் ஊடாகவே அமெரிக்காவிற்குள் பிரவேசிக் கின்றார்களென்று பிரஜைகள் குழு தெரிவித்துள்ளது.

# புஷ் பதவி ஏற்பு நிகழ்ச்சிக்கு டிக்கெட் விற்பனை அமோகம்

கடந்த நவம்பர் மாதம் அமெரிக்க சனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற ஜோர்ஜ்புஷ் சனாதிபதியாக மீண்டும் பதவி ஏற்கும் நிகழ்ச்சி இன்று 20 ஆம் திகதி நடக்கிறது.இதையொட்டி வோஷிங்டன் நகரில் பிரமாண்ட ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது.

பாதுகாப்பு ஒத்திகை இராணுவ அணிவகுப்பு ஒத்திகையும் நடக் கிறது. பதவி ஏற்பு நிகழ்ச்சியை பார்க்க பொதுமக்களும் அனுமதிக் கப்படுகிறார்கள். இதற்கான டிக்கெட் விற்பனை விறுவிறுப்பாக நடைபெற்றன. இப்போது டிக்கெட் அனைத்தும் விற்றுத் தீர்ந்து விட்டன. அடையாள அட்டையுடன் தான் இந்த டிக்கெட்டுக்கள் விற்கப் பட்டன.



வியட்னாம் கிராமம் ஒன்றில் கோழிகளை விற்பனை செய்யும் ஒரு பெண்ணையும் அவரது கோழிகள் கடையை விட்டு செல்வதையும் காணலாம் பறவைக்காய்ச்சல் பரவிய 5 ஆவது நாடாக விளங்கும் வியட்னாமில் அந்நோயினால் பெருமளவு கோழிகள் பலியானமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# தீவிரவாதத் தாக்குதல்களை நிறுத்த பலஸ்தீன சனாதிபதிக்கு அழுத்தம்!

## -எல்லையில் பாதுகாப்பு அதிகரிப்பு

பலஸ்தீன பாதுகாப்புப் படை யினர் இஸ்ரேலுடனான காஸா பகுதியின் எல்லைப் புறத்தில் சில நாட்களுக்கு கடமையில் அமர்த் தப்படுவார்கள் எனத் தெரிவிக் கப்படுகின்றது. பலஸ்தீனத் தீவிர வாதிகளின் தாக்குதலை நிறுத்தும் வகையில் இதற்கான உத்தரவை சனாதிபதி மகமுட் அபாஸ் விடுத் துள்ளார். தற்கொலைத் தாக்கு தலின் பின்னணியில் அபாஸ் பாதுகாப்புப்படை அதிகாரிகளை 'யும் மற்றும் ஹமாஸ் இராணுவக் குழுவின் தலைவர்களையும் நேற்று முன்தினமிரவு சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். இச்சந்திப்பின் போது அபாஸ் இஸ்ரேலுக்கெதிரான தாக்குதலை நிறுத்துமாறு தீவிரவாதிகளிடம் கோரியுள்ளார். சமாதானப் பேச்சு வார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப் பதற்கு முன்னர் தீவிரவாதிகளின் தாக்குதல் நிறுத்தப்பட வேண்டு மென்று இஸ்ரேலியப் பிரதம மந்திரி ஏரியல் ஷரோன் வலி யுறுத்தியுள்ளார். இறுதியாக இடம்பெற்றதற்கொலைக் குண்டுத் தாக்குதலில் இஸ்ரேலியப் படையினருக்குத் தகவல் கொடு க்கும் ஒருவர் கொல்லப்பட்ட தோடு மற்றும் 7 இஸ்ரேலியர்கள் காயங்களுக்குள்ளானார்கள்.

பலஸ்தீன சனாதிபதி அபாஸ் தனது தேர்தல் பிரச்சாரத்தின் போது வன்முறைகள் நிறுத்தப் படும் எனத் தெரிவித்த வாக் குறுதிகளை நிறைவேற்று மாறு அமெரிக்காவும் இஸ்ரேலும் அழுத்தங்களைக் கொடுத்து வரு கின்றமை குறிப்பிடத்தக்கது.

# நடுவானில் இரு விமானங்கள் ஒன்றுடனொன்று மோதி விபத்து!

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் ஒக்லகாமா நகருக்குஅருகே நடுவானில் பறந்து கொண்டிருந்த 2 விமா னங்கள் நேருக்கு நேர் திடீர் என்று மோதிக் கொண்டன. இதில் ஒரு விமானம் பயிர் நிலங்களில் பூச்சி மருந்து தெளிக்கும். விமா னம் இன்னொன்று அமெரிக்க இராணுவ விமானம் அது பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டி ருந்தது. 2 விமானங்களும் மோதி யதில் பூச்சி மருந்து தெளித்த விமானம் நொருங்கி விழுந்தது. அதில் இருந்த விமானியும் பலி யாகிவிட்டார். இராணுவ விமானத் தில் இருந்த 2வீரர்களும் பாராசூட் மூலம் குதித்தனர். லேசான காய ங்களுடன் அவர்கள் உயிர்தப்பி விட்டனர்.



# இங்கிலாந்தில் குடியேறுவதற்காக போலித் திருமணம் செய்த 25 இந்தியர்களுக்கு சிறை!

(லண்டன்)

இங்கிலாந்தில் குடியேறுவதற்காக அந்த நாட்டுக் காரர்களை இந்தியர்களுக்கு போலியாகத் திருமணம் செய்து வைத்த 25 இந்தியர்களுக்கு சிறைத் தண்ட னை விதிக்கப்பட்டது. இங்கிலாந்து நாட்டின் குடி யேற்றச் சட்டத்தை மீறி, அந்த நாட்டில் குடியேற விரும்பும் இந்தியர்களுக்கு பணத்தைப் பெற்றுக் கொண்டு உதவும் மோசடி வேலை சமீபத்தில் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

இங்கிலாந்தில் வசிக்கும்இந்தியர் சலீம் முல லான் 50வயதான இவர் லைசெஸ்டர் நகரைச் சேர்ந் தவர் லண்டனில் வசிக்கும் 66 வயது இந்தியர் இப்ராகிம் உமார்ஜி இவர்கள் இருவரும் சேர்ந்து கடந்த 5 ஆண்டுகளில் 36 இந்தியர்களுக்கு இங்கி லாந்தில் வசிக்கும் பெண்களை போலியாகத் திரு மணம் செய்துவைத்துள்ளனர்.

கணவனை இழந்த, விவாகரத்துச் செய்த பெண் கள்தான் இந்த மோசடிக்குப் பயன்படுத்தப்பட்டனர். அவர்கள் பணம் கிடைக்கிறதே என்பதற்காக இந்தப் போலித் திருமணத்துக்குச் சம்மதித்தனர்.ஒரு பெண் 6ஆண்களை 5 ஆண்டு காலத்தில் திருமணம் செய்து இருக்கிறார். சில பெண்கள் இந்தியர்களைத் திரு மணம் செய்வதற்காக இந்தியாவுக்கும் வந்து உள் ளனர். இந்தப் பெண்கள் திருமணம் முடிந்து, இந் தியர் இங்கிலாந்தில்குடியேறும்வரை மனைவி போல நடிப்பார்கள் இந்த மோசடியை இங்கிலாந்துப் பொ லிசார் கண்டு பிடித்து நீதிமன்றில் வழக்குத் தொடர்ந் தனர். வழக்கை விசாரித்த நீதிபதி சைமன் ஹமாண்ட் சலீமுக்கும் உமார்ஜிக்கும் 4 ஆண்டு சிறைத் தண்ட னை விதித்தார்.மேலும் 23 இந்தியர்களுக்கு 3 ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.



தாய்வானில் கடும் குளிர் ஏற்பட்டுள்ளதால் ஒராங்குட்டான் குரங்கு மிருகக்காட்சிச்சாலை அதிகாரியால் வழங்கப்பட்ட போர்வையை போர்த்திக் கொண்டுள்ளது.



சுனாமியால் பாதிக்கப்பட்ட நகரங்களை மீளக் கட்டியெழுப்புவதற்காக திட்டமிடல் செயற்பாட்டில் ஈடுபட்டுவரும் குழுவினரை தமிழீழ கடற்படை சிறப்புத் தளபதி கேணல் சூசை அவர்கள் சந்தித்து கலந்துரைய ாடுவதை படத்தில் காணலாம். (படம் - சசி)

### தமிழர் தாயகப் பிரதேசத்தில்

# பாதிக்கப்பட்டோருக்கு உதவ அனர்த்தகால உளநலபணிக்குழு

**தமிழர் தாயகப் பிரதேசத்தில் சுனாமி காரணமாகப் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் உட்பட மக்களுக்கு உளசம்பந்தப்பட்ட பயிற்சிகளை வழங்குவதற்காக அனர்த்த கால உள நல பணிக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.**

இந்தக்குழுவின் தலைவராக யாழ்ப்பாண பல்கலைக்கழக உள மருத்துவத்துறை தலைவர் தயா சோமசுந்தரம் நியமிக்கப்பட்டுள் ளார். இதனைத் தவிர தெல்லிப்பழை பொதுவைத்தியசாலை உள மருத்துவர் சிவயோகன், அகவொளி இயக்குநர் வண பிதா ராசநாயகம், வைத்தியகலாநிதி சிவசங்கர், பிரித்தானிய நாட்டின் உளவியல் மருத்துவர் டன்வேஸ் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர் இந்தக் குழு எதிர்வரும் வெள்ளிக்கிழமை கூடி தமது செயற்பாடுகள் குறித்து ஆராயவுள்ளது

இதேவேளை பிரித்தானியாவிலிருந்து வருகை தந்த வைத்தியர்களான சாந்தி சூரியகுமாரன் மற்றும் ரட்ணா புஸ்பராஜா ஆகியோர் உளவளத் துணை பணியாளர்களுக்கு பயிற்சிகளை வழங்கிவருகின்றனர். அத்துடன் அருட்திரு றெஜினோல்ட், அருட்சகோதரிகளான கிறிஸ்ரபெல் மற்றும் லூட்ஸ் ஆகியோர் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உளவளத்துணை ஆலோசனைகளை வழங்கி வருகின்றனர்.

மேலும் வடக்குக் கிழக்குப் பகுதியில் பேராசிரியர் டாக்டர் தயாசோமசுந்தரம், அருட்திரு நேசகுமார் சாள்ஸ் டேவிற் அடிகளார், திருமதி எழுமதி கரிகாலன், திருமதி பாலகுமார், திருமலை, மட்டக்களப்பு.அம்பாறை, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு பகுதிகளில் பணியாற்றும் உளவளத் துணைத் தொண்டர்களுக்கு பயிற்சியை வழங்கிவருகின்றனர்.

## கிருஷ்ணா முன்பள்ளி ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி 4ஆம் வாய்க்கால் மருதநகர்ப் பகுதியில் கிருஷ்ணா முன்பள்ளி கடந்த 17 ஆம் திகதியன்று ஆரம்பித்து வைக்கப்பெற்றது.

வண.பிதா ரூபன், எஸ்.ஜெயராசா, எம்.தனபாலன் ஆகியோரின் பெரு முயற்சியின் பயனாக ஆரம்பிக்கப் பெற்றுள்ள மேற்படி முன் பள்ளியினால் மருதநகரைச் சேர்ந்த 25இற்கு மேற்பட்ட சிறார்கள் பயன் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## நியாப் திட்டத்தின் கீழ் வீதி புனரமைப்பு

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சிப் பகுதியில் நியாப் திட்டத்தினரால் வீதிகள் புனரமைக்கப்படுகின்றன. கட்சன் வீதியில் இருந்து சிவிச் சென்ரர் வரையான உள் வீதியும், நாவலர் வீதியில் இருந்து மாதிரிப் பண்ணையின் பின்புறமாகவும் வீதிகள் புனரமைக்கப்படுகின்றன. இவ்வீதிகள் இரண்டும் கடந்த ஆண்டு புனரமைப்பு வேலைகள் நடைபெற்று மழை காரணமாக இடைநிறுத்தப் பட்டிருந்தன. தற்போது புனரமைப்பு நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (12)

## பிரதி வெள்ளிதோறும் பற்சிகிச்சை

சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட மருதங்கேணி வைத்தியசாலையில் பிரதி வெள்ளி தோறும் பற் சிகிச்சை நடைபெறுவதற்கான ஒழுங்குகள் யாவும் பூர்த்தியாகியுள்ளது என்பதை பிராந்திய பல் வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி: மாசிலாமணி தவராஜா தெரிவித்துள்ளார்.

இதற்கமைவாக முதலாவது பல் வைத்திய சேவை எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## உந்துருளி, ஈருருளி மோதியதில் மூவர் காயம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்திக்கு அண்மையில் நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் நடந்த உந்துருளி துவிச்சக்கரவண்டி விபத்தில் மூவர் காயமடைந்துள்ளனர்.

கரடிப்போக்குச் சந்தியில் இருந்து கிளிநொச்சி நோக்கி வந்து கொண்டிருந்த துவிச்சக்கரவண்டி திடீரென வீதியின் குறுக்காகத்திருப்பப்பட்ட வேளை துவிச்சக்கரவண்டிக்குப் பின்னால் வந்து கெண்டிருந்த உந்துருளி துவிச்சக்கர வண்டியுடன் மோதியது. இதனால் கட்டுப்பாட்டை இழந்த உந்துருளி எதிரே வந்த துவிச்சக்கர வண்டியுடனும் மோதியது.

இதனால் உந்துருளியைச் செலுத்தி வந்த கதிரித்தம்பி ஜெயக்குமார் (வயது 23) என்பவர் படுகாயமடைந்தார். அவருடன் வந்த ஸ்ரனிஸ் யூலியஸ் (வயது 28) என்பவர் சிறுகாயத்திற்குள்ளானார்.

இதேவேளை துவிச்சக்கர வண்டியில் தாயாருடன் வந்துகொண்டிருந்த ஒரு வயதான பாலயோகர் கோபித என்ற குழந்தைக்கும் காயம் ஏற்பட்டது. இவ்விபத்துத் தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி காவல் துறையினர் மேற்கொண்டு வருகின்றனர். (கு)

## புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியிலும் சமுர்த்தி நிவாரணம் வழங்க நடவடிக்கை

விடுதலைப்புலிகளின் கட்டுபாட்டுப்பகுதியில் சமுர்த்தி நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

இது தொடர்பாக ஆராயும் கூட்டம் ஒன்று கடந்த திங்கட்கிழமை வவுனியா அரச செயலகத்தில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டம் வவுனியா அரச அதிபர் சின்னத்தம்பி சண்முகம் தலைமையில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்திற்கு முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மாவட்ட அரச அதிபர்களும், நிதிஅமைச்சின் மேலதிக செயலாளர் ஆர். எம்.கே. ரட்ணாயக, சமுர்த்தி அமைச்சின் மேலதிக செயலாளர் விஜயசேகர, சமுர்த்தி ஆணையாளர் யு.என். ரொட்ரிகோ, வவுனியா உதவி சமுர்த்தி ஆணையாளர் சிதம்பரபிள்ளை சபாலிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கிளிநொச்சி,முல்லைத்தீவுப் பிரதேசத்தில் சமுர்த்தி அதிகாரிகள் இல்லாமல் இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுக்க முடியாது என்று அப்பிரதேச அரச அதிபர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த வேலைத்திட்டம் முன்னெடுப்பதற்கு முதலில் அதிகாரிகள் நியமிக்கப்படவுள்ளனர். இதன் பின்னர் தான் முத்திரைகள் வழங்கப்படும். வவுனியா மாவட்டத்திற்கு வருடம் ஒன்றுக்கு சமுர்த்தி நிவாரணம் வழங்குவதற்கு 37 மில்லியன் செல வாகுவதாக வவுனியா சமுர்த்தி உதவி ஆணையாளர் சிதம்பரப்பிள்ளை சபாலிங்கம் தெரிவித்தார். (21)

## திருத்தம்

"அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தி நிவாரணப் பணிகளை சந்திரிகா முடக்கியுள்ளார்" எனும் தலைப்பில் நேற்றைய எமது பத்திரிகையில் அரச அதிபருக்கூடாக 500 இலட்சம் ரூபா வந்ததென கேணல் சூசை அவர்கள் தெரிவித்ததாகக் குறிப்பிடப் பட்டிருந்தமை தவறானது அந்தத் தொகை 50 இலட்சம் என்பதே சரியானதெனவும் தெரியப்படுத்துகின்றோம்.

## நிறுத்தல், அளத்தல் கருவிகளுக்கு முத்திரையிடும் பணி நடைபெறுகிறது

(அலுவலக செய்தியாளர்)

நிறுத்தலளவைக் கருவிகளை சரிபார்த்து முத்திரையிடும் நடவடிக்கையினை நெடுங்கேணி பிரதேசத்தில் வருவாய்ப்பகுதி நிறுத்தலளவைப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.நெடுங்கேணி - முல்லைத்தீவு சாலையில் அமைந்துள்ள நிறுத்தலளவைச் செயலகத்தில் தற்போது மேற்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பெற்று வருகின்றன.

எதிர்வரும் 28 ஆம் திகதி வரை மேற்படி செயற்பாடுகள் இடம் பெறுமெனவும் நெடுங்கேணிப் பகுதியில் பயன்பாட்டிலுள்ள அனைத்து நிறுத்தலளவைக் கருவிகளையும் குறிப்பிட்ட காலப்பகுதிகளில் சரிபார்த்து முத்திரையிட்டுக் கொள்ளும் வண்ணம் நிறுத்தலளவைப் பகுதியினர் வேண்டிக் கொள்கின்றனர். (சோ)

## வட்டக்கச்சி மத்திய மருந்தகத்தில் கடந்த காலாண்டில் 11067 பேர் சிகிச்சை

வட்டக்கச்சி மத்திய மருந்தகம் மற்றும் மகப்பேற்று மருத்துவமனையில் கடந்த காலாண்டில் (10ஆம் 11ஆம்,12ஆம் மாதம்) வெளிநோயாளர், உள்நோயாளர் பிரிவில் 11067 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர். 10 ஆம் மாதம் (ஐப்பசி) வெளிநோயாளர் பிரிவில் 3305 பேரும், உள்நோயாளர் பிரிவில் 58 பேரும், 11 ஆம் மாதத்தில் (கார்த்திகை) வெளி நோயாளர் பிரிவில் 3822 பேரும் உள்நோயாளர் பிரிவில் 77 பேரும், 12 ஆம் மாதம் (மார்கழி) வெளி நோயாளராக 3718 பேரும், உள்நோயாளர் பிரிவில் 87 பேருமாக சிகிச்சை பெற்றுள்ளனர்.

இவர்களில் சளிக்காய்ச்சல் 1574 பேரும், ஏனைய காய்ச்சல் 1565 பேரும், சிரங்கு 278பேரும், குருதிச்சோகை 33 பேரும், மலேரியா 313 பேரும், போசாக்கு 203 பேரும், வயிற்றோட்டம் 145 பேரும் சிகிச்சைபெற்றுள்ளனர்.

19 சிசுக்கள் பிறந்துள்ளனர். இவர்களுள் இம் மூன்று மாத காலத்தில் கார்த்திகை மாதத்திலேயே அதிகளவு நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர். இவ்வைத்தியசாலைக்கு உடனடிச் சேவைக்காக அம்பியூலன்ஸ் வண்டி ஒன்று கடந்த ஆண்டில் வழங்கப்பட்டது. (12)

## ஆறு மாதங்களுக்கு உணவுப் பொருள்

சுனாமி கடல் அனர்த்தத் தினால் பாதிப்புக்குள்ளான சகல மக்களுக்கும் ஆறுமாதகாலத் திற்கு எவ்வித தட்டுப்பாடுமின்றி உணவுப் பொருட்கள் விநியோகிக் கப்படுமென உலக உணவுத் திட்டப் பிரிவு தெரிவித்துள்ளது.

## காவலாளி சடலமாக மீட்பு


(உடையார் கட்டு)

உடையார் கட்டில் கிணற்றிலிருந்து ஒருவர் சடலமாக மீட்கப் பட்ட சம்பவம் 17.01.2005 அன்று 1.00 மணியளவில் இடம் பெற்றது.

இச்சம்பவத்தில் சடலமாக மீட்கப்பட்ட நபர் பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் உடையார்கட்டு கிளையின் காவலாளியான பாலச்சந்திரன் (வயது 54) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் காவல் கடமைக்கு சென்று அங்கு கிணற்றில் நீர் அள்ளச் சென்ற வேளை தவறிவீழ்ந்து மரணமடைந்திருக்கலாமெனக் கூறப்படுகிறது.







வன்னிக்கு விஜயம் செய்த நெதர்லாந்துத் தூதுவர்களும், ஐரோப்பிய யூனியனின் பிரதிநிதியும் சுனாமியால் அழிவடைந்த முல்லை நகரை நேற்று முன்தினம் பார்வையிடுவதையும் தமிழீழ திட்டமிடல் செயலகப் பணிப்பாளர் தூயவன் அவர்களை முல்லை செயலணிக்குழு செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடுவதையும், முல்லைத்தீவில் இருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களைப் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள் - சசிக்குமார்)

# இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் தனிமனித சுதந்திரம் கேள்விக்குறியாகவுள்ளது

## -தென்மராட்சி பொதுமக்கள் ஒன்றியம் கண்டனம்

(தென்மராட்சி)

**"இராணுவ வாகனம் மோதிப் பலியான சம்பவத்தில் படையினரோடு இணைந்து சிறிலங்காப் பொலிசார் நடந்து கொண்ட விதம் கடும் கண்டனத்திற்கு உரியது" என்று தென்மராட்சி பொது மக்கள் ஒன்றியம் தெரிவித்துள்ளது**

மிருசுவில் பழைய வாய்க்கால் பகுதியில் நேற்று முன்தினம் இரவு வேலைக்குச் சென்று விட்டு சைக்கிளில் வீடு திரும்பிக்கொண்டிருந்த வயிரவன் நடேசன் என்ற ஐந்து பிள்ளைகளின் தந்தை இராணுவ முகாமிற்கு முன்னாலேயே இராணுவ வாகனத்தால் மோதுண்டு பலியாகியுள்ளதுடன் அவசர அவசரமாக பொலிசாரின் துணையுடன் சடலம் சம்பவ இடத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டதுடன், விபத்தினால் சாலையில் சிதறிய இரத்தத்தையும் புழுதி மண்ணைப் போட்டு மறைக்கப்பட்ட சம்பவத்திற்கு, பொலிசாரின் துணையும் ஆலோசனைகளும் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் இனம் தெரியாத வாகனம் மோதிப்பலியானவர் என ஒப்படைக்கப்பட்டுள்ளமையும் வழக்குப் பதிவு செய்துள்ளமையும் மிகவும் ஒரு கேவலமான மிருகத்தனமான செயல்இச்செயற்பாட்டை மிகவும் வன்மையாகக் கண்டிப்பதுடன் சிறிலங்காப் படைகளின் அனைத்து அலகுகளும் தமிழ் மக்களுக்கு எதிராகவே செயற்பட்டு வருகின்றன என்ற உண்மை இந்தச் சமாதான காலத்திலும் நிருபணமாகியுள்ளது. சம்பவ இடத்தில் இருந்து நீதிபதி சடலத்தைப் பார்வையிட்ட பின்பே சடலம் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்படுவது ஒரு வழக்கமான ஒன்றாக இருக்கின்ற பொழுதும் நீதிமன்ற நடைமுறைகள் அனைத்தும் இச்சம்பவத்தில் படையினராலும் பொலிசாரினாலும் மீறப்பட்டு உள்ளதுடன் தனிமனித சுதந்திரம் என்பது இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளதுடன் இச்சம்பவத்தில் பலியான குடும்பத்திற்கு அரசாங்கம் நட்ட ஈட்டுத்தொகை வழங்குவதுடன் இந்த விபத்துக்கு படையினரின் வாகனம் தான் காரணம் என பொலிசார் வழக்குப் பதிவு செய்ய வேண்டும் எனவும் தவறும் பட்சத்தில் நீதியான வழிகளில் மக்கள் போராடத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளது. (28)

# வீதிக்கு மிக அண்மையாகவுள்ள முட்கம்பி வேலிகளால் ஆபத்து!

(தென்மராட்சி)

வரணிப்பகுதியில் உள்ள சிறிலங்காப் படைமுகாமின் முன் அரண்கள் சாலைக்கு அருகாமையாக நகர்த்தப்பட்டுள்ளதுடன் அதற்கு முன்னால் சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்துக்கு சாலைக்கு அருகிலேயே முட்கம்பி வேலி சுருள்களை படையினர் அமைத்துள்ளமையால் பாரிய ஆபத்து ஏற்படும் அபாயம் உள்ளதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

தடுமாறியோ வீதியை விட்டு அரை அடி சற்று விலகினாலோ முட்கம்பி மேலே தான் விழும் நிலை உள்ளதாகவும் கடந்த மூன்று வாரத்திற்குள்ளேயே படையினரின் முன் அரண்கள் வீதிக்கு அருகில் நகர்த்தப்பட்டுள்ளதுடன் முட்கம்பிகளும் வீதிக்கு அருகிலேயே அமைக்கப்பட்டுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். இதேநிலை கொடிகாமம் பொலிஸ் நிலையத்திற்கு முன்னாலும் புத்தூர் சந்தியிலும் படையினர் முட்கம்பி சுருள்களை படை நிலைகளுக்கு முன்னால் சாலைக்கு அருகே அமைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (28)

# பொது மக்களின் உடமைகளை களவாடி நிலையமைக்கும் படையினர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பருத்தித்துறைப் பகுதியில் சுனாமி அலைத்தாக்கத்தினால் அடித்துச் செல்லப்பட்ட கடலோரக் காவலரண்களை மீளமைக்கும் நடவடிக்கையில் கடற்படையினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். குறிப்பாக பருத்தித்துறை, கற்கோவளம், முனை, சக்கோட்டை போன்ற கடலோரப் பகுதிகளில் கடற்படையினர் காவலரண்களை அமைக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இவற்றுக்காக அப்பகுதிகளில் சிதைந்துள்ள பொது மக்களின் கூரைத் தகடுகள், கொங்றீட் கற்கள் என்பவற்றைப் பிடுங்கி எடுக்கின்றனர்.(33)

# மருதங்குளம் பாடசாலையைப் பார்வையிட வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அனுமதி மறுப்பு

## படையினரின் அடாவடித்தனத்தால் ஆட்சேபம்

(தென்மராட்சி)

எழுதுமட்டுவாள், மருதங்குளம் பாடசாலையைப் பார்வையிடச் சென்ற தென்மராட்சி வலயக் கல்வி அதிகாரியை மறித்து செல்லவிடாமல் படையினர் அட்டகாசம் புரிந்துள்ளனர்.

எழுதுமட்டுவாள், மருதங்குளம் பகுதியில் கடந்த கால போர் நடவடிக்கைகளால் உடைந்து போயுள்ள இப்பாடசாலை தற்பொழுது சுவிஸ்நாட்டின் உதவியுடன் புனரமைக்கப்பட்டு வருகிறது. இந்தக் கட்டடப் பணிகளைப் பார்வையிடச் சென்ற தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் மற்றும் அவருடன் சென்ற உத்தியோகத்தர்களையும் உள்ளே பார்க்கச் செல்லவிடாமல் படையினர் தடுத்ததுடன் கடும் போராட்டதிற்குப் பின்பே தம்மைப் படையினருக்கு அறிமுகப்படுத்தி வலயக்கல்விப் பணிப்பாளர் மற்றும் சகஉத்தியோகத்தர்கள் பார்வையிட்டுச் சென்றிருப்பதாகவும் தெரியவருகிறது.

இந்தக் கட்டடப்பணிகள் மிகவும் மந்த கதியில் இடம்பெற்று வருவதாகவும் இதனால் இப்பிரதேச மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்குப் பாரிய பின்னடைவு ஏற்பட்டிருப்பதாகவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (20)

# யாழ்.மாநகர சபை வீதிகளுக்கு வெளிச்சமூட்ட மின்சாரசபை பின்னடிப்பு

## நெக்கோட்டின் நிதியுதவிக்கு நடந்ததென்ன?

"யாழ்ப்பாண மாநகர சபை வீதிகளுக்கு வெளிச்சமூட்டுவதற்காக நெக்கோட் நிறுவனம் 6.854 மில்லியன் ரூபாவை யாழ் மாநகரசபை ஊடாக இலங்கை மின்சார சபைக்கு கடந்த ஆண்டு மார்ச் மாதம் வழங்கியது. 10 மாதங்கள் கடந்தும் இலங்கை மின்சார சபை எந்த விதமான நடவடிக்கையும் எடுக்காமல் அந்தப் பணத்தை மீண்டும் கொடுக்காமல் அசட்டையாக இருந்து வருவது அவதானிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக நெக்கோட் பணிப்பாளர், யாழ் மாநகர ஆணையாளருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் இலங்கை மின்சார சபையோடு தொடர்பு கொண்டு இக் குறித்த வேலையை மேலும் தாமதப்படுத்தாது நிறைவேற்றும் படி கேட்டுக் கொண்டுள்ளார்.

யாழ்ப்பாண பட்டினத்தின் அபிவிருத்திக்காக நெக்கோட் நிறுவனம் வழங்கிய 6.854 மில்லியன் ரூபாவையும் இலங்கை மின்சார சபை பயன்படுத்தாது வீணே போய்விடுமோ" என்ற அச்சம் யாழ். மாநகர சபைக்கு ஏற்பட்டுள்ளதென யாழ். மாநகர ஆணையாளர் கலாநிதி க.குணராசா தெரிவித்துள்ளார்.

# சட்டவிரோத மதுபான சாலைக்கு அனுமதி வழங்கும் முயற்சிக்கு ஆட்சேபம்

## - பொது அமைப்புக்கள் கூட்டாக நடவடிக்கை

(நல்லூர்)

மதுபான சாலைக்கான அனுமதியை வழங்கக்கூடாதென 20 இற்கும் மேற்பட்ட பொது அமைப்புக்கள், பாடசாலைகள், மத நிறுவனங்கள் வலியுறுத்தி வருகின்ற போதிலும் அதிகாரம் மிக்கவர்கள் அதனை வழங்கவேண்டுமென வலியுறுத்தி வருவதாகக் கூறப்படுகின்றது.

கல்வியங்காட்டுப் பகுதியில் பாடசாலைகள், மதநிறுவனங்களுக்கு அண்மையாக சட்டவிரோதமாக இயங்கி வருகின்ற மதுபான சாலைக்கே அனுமதிப்பத்திரம் வழங்கக்கூடாதென பொது அமைப்புக்கள் போர்க்கொடி தூக்கியுள்ளன.

இது சம்பந்தமான மகஜர் ஒன்றை யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர், நல்லூர் பிரதேச செயலர், யாழ்.மாவட்ட நீதிமன்ற நீதிபதி ப.விக்கினேஸ்வரன், மேலதிக நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன், வடமாகாண சிறிலங்கா பொலிஸ் அத்தியட்சகர், கோப்பாய் சிறிலங்கா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோருக்கும் முறையிட்டுள்ளன.

இதேநேரம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இது சம்பந்தமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மகஜரில் இம்மதுபான சாலை அமைப்பதன் மூலம் பாடசாலை செல்லும் மாணவர்கள் மற்றும் பொது மக்களும் பல்வேறு நெருக்கடிகளுக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்கும் உள்ளாக வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பணச் செல்வாக்குடைய இம் மதுபான உரிமையாளர் தனது செல்வாக்கைப் பயன்படுத்தி அனுமதிப் பத்திரத்தைப் பெறுவதற்கு சில அதிகாரமிக்கவர்களின் செல்வாக்கைப் பயன்படுத்தி வருவதாகக் கூறப்படுகின்றது.

மதுபானசாலைக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்படுமாக இருந்தால் அதற்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக பொது அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

இம் மகஜரில் 2 கிறிஸ்தவ தேவாலயங்கள், 11 இந்துக் கோவில்கள், 5 பாடசாலைகள், 6 பொது அமைப்புக்கள் இணைந்து கையொப்பமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (41)

-யாழ். குடாநாட்டின் கரையோரப் பகுதியில்-

# சுனாமியால் இடம்பெயர்ந்த மக்களுக்கு இடைத்தங்கல் முகாமமைத்தல் தீவிரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டின் கரையோரப் பிரதேசங்களைத் தாக்கிய சுனாமி கடற்பேரலையின் தாக்கங்களினால் இடம்பெயர்ந்து பாடசாலை அகதி முகாம்களில் தஞ்சமடைந்திருக்கும் மக்களுக்கான இடைத்தாங்கல் முகாம்களை அமைக்கும் பணியில் யாழ். மாவட்ட சுனாமி அனர்த்த புனர்வாழ்வுச் செயலணி தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள பாடசாலைகளை வழமை போல முதலாம் தவணை நடவடிக்கைகளில் ஈடுபடவும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை ஆரம்பிக்கவும் வசதியாகவே பாடசாலை அகதி முகாம்களில் தங்கியிருப்போரை இடைத்தாங்கல் முகாம்களை அமைத்து அங்கு தங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு அமைக்கப்படவுள்ள இடைத்தங்கல் முகாம்களுக்கு குடி நீர் மலசலகூடம் மருத்துவம், கல்வி ஆகிய அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் அனர்த்த புனர்வாழ்வு செயலணி தீவிரமாக ஈடுபட்டு வருவதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறையின் ஊடகப் பேச்சாளர் இமய வன் தெரிவித்தார். (33)

# படையினரால் கைதாகி காணாமல் போன குடும்பஸ்தர் தப்பிச் சென்று விட்டதாக அறிவிப்பு!

## விசாரணைக்கு நீதவான் உத்தரவு

(வடமராட்சி)

1996 ஆம் ஆண்டு காலப்பகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போனதாகக் கூறப்படும் குடும்பஸ்தர் ஒருவர் ஏற்கனவே தமது விசாரணையில் இருந்த போது தப்பித்துச் சென்று விட்டதாகப் படைத்தரப்பு யாழ். மேல் நீதிமன்றில் தெரிவித்துள்ளது.

குறித்த காலப்பகுதியில் கைதடி பிரதேசத்தில் வைத்து படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போன தம்பன் பாஸ்கரன் எனும் குடும்பஸ்தர் மீதான ஆட்கொணர்வு மனு நேற்று முன்தினம் யாழ்.மேல் நீதிமன்றில் மேல் நீதிமன்ற நீதவான் கே.பி.எஸ். வரதராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது.

குறித்த குடும்பஸ்தரின் மனைவியினால் தாக்கல் செய்யப்பட்ட இவ் ஆட்கொணர்வு மனுவில் எதிரிகளாக அப்பகுதி கிராம சேவையாளர் மற்றும் அங்கிருந்த இராணுவ முகாம் பொறுப்பதிகாரியான டுமிந்தஹெப்பிற்றிக்கொலாவ, முன்னாள் இராணுவத் தளபதி லயனல் பலேகல்ல ஆகியோர் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தனர். இந்த நிலையில் முதலாம் எதிரியாகக் குறிப்பிடப்பட்ட கிராம சேவையாளர் மேல் நீதிமன்றில் ஆஜராக குறிப்பிட்ட முகாம் பொறுப்பதிகாரியின் கட்டளையின் பேரிலேயே குறித்த நபரை அழைத்துச் சென்று அம்முகாமில் ஒப்படைத்திருந்ததாகத் தெரிவித்திருந்தார். எனினும் படைத்தரப்பு அவ்வாறு கையளிக்கப்பட்ட குறித்த நபர் தமது காவலிலிருந்து தப்பித்து அப்போதே ஓடிவிட்டதாக நீதிமன்றில் தற்போது தெரிவித்துள்ளனர். இந்நிலையிலேயே குறித்த நபர் படைமுகாமில் ஒப்படைக்கப்பட்டதை நீதி மன்று அப்பட்டமாக உணர்ந்து கொள்வதாகத் தெரிவித்த நீதவான் கே.பி.எஸ். வரதராசா ஆரம்ப கட்ட விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்க ஏதுவாக சாவகச்சேரி நீதவான் நீதிமன்றிற்கு வழக்கை மாற்றஞ் செய்ய உத்தரவிட்டார். அத்துடன் வழக்கு அடுத்த மாதம் 7ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (27)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப்பணியில் சிங்கள இனவாதிகளின் அரசியல் நாடகம்

இந் நாட்டின் மூன்றிலிரண்டு பங்கிலான கடற்கரைப் பிரதேசத்தை உலுக்கிய சுனாமி அலைத் தாக்கமும் அதன் அதிர்ச்சியும் படிப்படியாக மங்கி வரும் நிலையில் சிறிலங்காவின் அரசியலில் சிறுசிறு சலசலப்புடன் கூடிய மாற்றங்கள் தலையெடுக்கத் தொடங்கியுள்ளன. அதாவது சில பின் வரிசை அரசியல் வாதிகள் நாட்டின் அதிகாரத்தைக் கைப பற்றும் வகையில் செயலாற்றிக் கொண்டிருக்கின்றனர். குறிப்பாக சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கான உதவிப் பணிகள் தொடர்பில் ஒருவருக்கொருவர் முரண்பாடான வகையில் புனரமைப்பு ஆலோசனைகளை முன்வைத்து வருகின்றனர்.

சுனாமி அனர்த்தத்தின் விளைவாக சில அரசியல் வாதிகள் இன்னும் சிலரை விஞ்சுகின்ற வகையில் நிவாரணப் பணிகள் தொடர்பாக வாக்குறுதிகளையளித்து பிதற்றுகின்றனர். சில கட்சிகள் இதன் மூலம் தமக்கு அரசியல் இலாபத்தைப் பெற முயல்கின்றன.

தென்னிலங்கையில் சுனாமி புனரமைப்புப் பணிகளில் ஈடுபடும் ஜே.வி.பியினரும் அவர்களின் ஆதரவாளர்களும் கட்சிச் சின்னங்களையும், சிவப்பு நிறத் தொப்பிகளையும், அங்கிகளையும் அணிந்து நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.


இந்த நடவடிக்கை காரணமாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் கூட உசார் அடைந்துள்ளனர். அத்துடன் இது தொடர்பான முறைப்பாடு ஒன்றையும் சனாதிபதி சந்திரிகாவிடம்

அப்பகுதிகள் மீது திசை திருப்பப்பட்டுள்ளது.

இந்த வகையில் ஐ.தே கட்சியும் மீள் கட்டுமானப் பணிகள் தொடர்பாகத் தனது தனிப்பட்ட பிரேரணையை முன் வைத்துள்ளது. அதனைத் தமது கட்சி உறுப்பினர்களுக்கும் அறிவித்து சனாதிபதியின் அனுமதிக்கும் விடப்பட்டிருக்கின்றது. அதே வேளை ஜே.வி.பியினரும் மீள் கட்டுமானப் பணிகள் தொடர்பாக தமது பிரேரணைகளையும் முன் வைத்துள்ளனர். ஆயினும் ஜே.வி.பி இந்த அரசாங்கத்தின் பிரதான இடத்தைப் பெற்றுள்ள நிலையில் அது தனிப்பட்ட முறையில் இவ்வாறு பிரேரணையை முன் வைத்திருப்பது கேள்விக்கிடமாகியுள்ளது. அரசாங்கத்தின் பாரிய திட்டங்களில் அரசின் பங்காளியான ஜே.வி.பியின் பிரேரணை கவனத்தில் எடுக்கப்படவில்லை என்பது இன்றைய முக்கியமான வினாவாகியுள்ளது.

அரசிடம் கையளித்துள்ள னர். கடந்த புதனன்று இது தொடர்பான சந்திப்பொன்று 3 மணியளவில் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பினும் சந்திரிகா 5 மணியளவிலேயே சந்திக்கலாம் எனக் கூறியிருந்தார். அந்தச் சந்திப்பு சுமார் 45 நிமிடங்கள் வரை நிகழ்ந்தது. எனினும் லக்ஸ்மன் கதிர்காமரும் சந்திரிகாவும், வருகை தந்து சுமுகமாகப் பேச்சுக்கள் நடந்தபோது பிரதமர் அந்த சந்திப்பில் கலந்து கொள்ளாமை ஒரு வகை சலனத்தை உருவாக்கியது.

சனாதிபதியும் ஏனைய சிரேஷ்ட அமைச்சர் களும் வெளிநாட்டில் இருந்த வேளை அனர்த்தம் தொடர்பான பணிகளில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தனது தலைமையில் நிவாரண உதவிகளைப் பெற்றதும், பணிகளை மேற்கொண்டதும் சந்திரிகாவுக்கு மனக்கசப்பை உண்டு



மகிந்தராஜபக்ஷ



சந்திரிகா

கட்சியினரின் ஆலோசனைகளும் ஒத்து பெறப்படுவதை ஜே.பி.வி.யினர் வெறுக்கின்றனர்.

எனவே இந்த மாறுபட்ட அரசியல் வாதிகளின் ஆலோசனைகளும் மாறுபட்ட வழியிலேயே செல்கின்றன.

எவ்வாறாயினும் இந்த அரசாங்கம் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாகத் தேவைப்படும் குடியிருப்புக்கள், சுகாதார வசதிகளைச் செய்து கொடுக்க முன்பு நீண்டகால பாரிய திட்டங்களிலேயே முழுக் கவனத்தையும் செலுத்துகின்றது. சுனாமி தாக்கத்துக்கு முன்பிருந்த நாட்டின் பொருளாதாரப் பின்னடையை சீர் செய்யும் விதத்திலேயே தற்போதைய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த நினைக்கின்றது. தற்போது இந்நாட்டுக்கு கிடைக்கப் பெற்ற அபரிமிதமான உதவிகளை தத்தம் அரசியல் இலாபம் கருதி பயன்படுத்த முற்பட்டால் அது பாரிய பிரச்சினைக்கு முகம் கொடுக்க வேண்டியேற்படும் அதில் ஆபத்தும் இருக்கின்றது.

இந்த விடயத்தில் எவ்வாறானதேசிய ஒற்றுமை ஏற்படினும் பின்னர் அது மீளமைப்புப் பணிகளில் பிரச்சினைகளையே ஏற்படுத்தும்.சுனாமி தாக்கத்துக்குப் பின்னர் நாடு உலகளாவிய ரீதியில் அறிமுகமாகியிருக்கின்றது. நாட்டுக்கு ஏற்பட்ட அழிவுகள் சர்வதேசத்துக்கும் ஏற்பட்ட அழிவாகக் கருத முடியாது விட்டால் இவ்வாறான சர்வதேச உதவிகள் கிடைப்பது கேள்விக்குறியாகிவிடும்.

குறிப்பிட்ட சனத்தொகையைக் கொண்ட சிறிய நாடு என்றாலும் அதன் மீது சர்வதேசப் பார்வை திரும்பியுள்ளது. அமெரிக்கா, பிரிட்டன் படைகள் இங்கு



விமல் வீரவன்ச

அளிந்துள்ளனர்.

சூழ்ந்திய குட்டையில் மீன் பிடித்தல் என்பதற்கிணங்க ஜே.வி.பியினரது இச் செயல் விரும்பத்தகாத ஒன்றாக கருதப்படுகின்றது. இந்த முறைப்பாடு தனது செவிகளுக்கு எட்டியதுடன், சனாதிபதி சந்திரிகாவும், பெரிதும் ஆத்திரமடைந்ததுடன் பல சந்தர்ப்பங்களில் ஜே.வி.பியினரோடு சீறிப் பாய்ந்துள்ளார்.

குறிப்பிட்ட சில இடங்களில் ஜே.வி.பி. யினரின் நிவாரணப் பணியாளர்கள் மீது பாதிக்கப்பட்ட மக்கள் முரண்பட்டும் உள்ளனர். மீட்புப் பணிகள் அனைவருக்கும் சமமாக அறிவிக்கப்பட்ட போதும் ஜே.வி.பி. யினர் நிவாரணப் பொருட்களை ஏனையோரிடமிருந்து பறித்தெடுத்து தங்களின் கட்சிச் சின்னங்களை அணிந்தவாறு விநியோகம் செய்துள்ளனர்.

இந்த நடவடிக்கை காரணமாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலர் மைத்திரிபால சிறிசேன அரசியல் கட்சிகளின் சின்னங்களின் கீழ் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளக்கூடாது என அறிக்கை விடுத்தார்.

தற்போது மக்கள் ஓரளவு இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பும் நேரத்தில் வடக்கு, கிழக்கு, தெற்கு மாவட்டங்களில் நடைபெறும் மீள் கட்டமைப்புப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் அரசியல் வாதிகளின் கவனமும்

ஜே.வி.பியினரின் ஒன்றுக் கொன்று முரண்பட்ட இந்த நடவடிக்கையினால் அது மீண்டும் தீவிரவாதப் போக்கில் அரசுக்குள் செல்வாக்குச் செலுத்த முடிவு செய்துள்ளதாக அனுமானிக்கக் கூடியதாகவுள்ளது.

(முன்னர் இனப்பிரச்சினை உள்ளிட்ட) எந்த நடவடிக்கைளிலும் உலக நாடுகளின் தொடர்பு இருக்கக் கூடாது எனத் தொண்டை கிழியக் கத்திய ஜே.வி.பியினர் தற்போதைய சூழ்நிலையில் வெளிநாட்டு உதவிகளுக்குக் கையேந்தி நிற்கின்றனர். தற்போது அரசுக்குள் முக்கிய பங்கு வகிக்கும் அவர்களின் கீழ் மூன்று அமைச்சுக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அதன்படி தென்பகுதியில் மீன்பிடித் தொழில், சிறுகைத்தொழில், விவசாயம் போன்றவை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. இவற்றைப் புனரமைக்கும் பணிகள் வெளிநாட்டு உதவியுடன் இவர்களுக்கூடாகவே நடைபெற வேண்டும் என்பது ஜே.வி.பியின் தற்போதைய நிலைப்பாடாகும்.

விவசாயத்தைப் பொறுத்தவரை பாரிய விளை நிலங்கள் கடல் நீர் புகுந்து உவர்த் தன்மையடைந்துள்ளதால் அவற்றை சீர் செய்வதில் விவசாய அமைச்சுக்கு பாரிய பொறுப்புள்ளது. இவற்றுக்கு வெளிநாடுகள் உதவ முன்வந்ததால் நேரடியாக ஜே.வி.பி தொடர்பு கொள்ளும் நிலையேற்பட்டுள்ளது.

நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றுபட வேண்டும் என்ற வகையில் ஐ.தே.கட்சியின் சார்பில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் கருஜயசூரியாவும் இணைந்து தமது ஆலோசனைகளை

பண்ணியது. இதனால் அனைத்துப் பொருட்கள், சேவைகள், நிதி போன்ற உதவிகள் சனாதிபதியின் கீழாகவே சென்று சேரவேண்டும் என சந்திரிகா நாடு திரும்பியதும் கண்டிப்பான உத்தரவைப் பிறப்பித்தார்.

இதற்கிடையில் பிரதமர் ராஜபக்ஷ ஆங்காங்கு பல திட்டமிடல் அதிகாரிகளையும் பொறியியலாளர்களையும் வரவழைத்து சந்திப்புக்களை நடத்தியதுடன் அம்பாந்தோட்ட நகரை புதிய இடத்தில் புதிதாக நிர்மாணிக்கும் திட்டங்களில் இறங்கினார். அத்துடன் காலிநகரையும் புனரமைக்கத் திட்டமிட்டார்.ஆயினும் இதற்கென சனாதிபதியால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் குழு இப்பணிகளை தமது கட்டுப்பாட்டில் கொண்டு வர எண்ணிய போது பிரதமர் ராஜபக்ஷ சந்திரிகா தன்னை ஓரம் கட்டுவதாக உணர்ந்தார். எனவே இவ்விரு பகுதியினருக்கும் இடையில் ஏற்பட்ட பனிப்போரினால் அடுத்தடுத்த நாட்களில் வருகை தரவிருந்த கனேடிய அதிகாரிகளை சந்திக்கும் வாய்ப்பை மகிந்த ராஜபக்ஷ இழந்துவிட்டார்.

இந்தநிலையில் அடுத்து வந்த கொரிய நாட்டுப் பிரதமர், ஐ.நா அதிகாரிகளுடன் இவர் இணைந்து கொண்டு தென்பகுதி அனர்த்தங்களைப் பார்வையிட்டதுடன் அவர்களுக்கு நிலைமையை விளக்கியுள்ளார்.

இதேவேளை ஐ.தே.கட்சி உறுப்பினர்களைச் சந்தித்து சனாதிபதி பேரலை அழிவு சம்பந்தமாக பேச்சு நடத்தியதை ஜே.பி.வி. யினரும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியினரும் வெறுத்துள்ளனர். அரசுக்குள் அங்கம் வகிக்கும் தமது ஆலோசனைகளுடன் ஐ.தே.



ரணில்

வந்திருப்பது ஜே.வி.பியினருக்கு சற்று வயிற்றெரிச்சலை உண்டு பண்ணலாம். இந்த விடயத்தில் ஜே.வி.பியின் நிலைப்பாடு விரைவில் தெரிய வரும்.

அமெரிக்காவின் பல கடற் படைக் கப்பல்கள் இங்கு உதவிக்கு வந்துள்ளன. பல உலங்கு வானூர்திகள் சேவையிலீடுபடுகின்றன. ஏறத்தாழ 600 படையினர் சேவையிலுள்ளனர்.

கேசர அபேவர்தன
(டெய்லி மிறர்)
தமிழில்:-வடிவேல்

அமெரிக்கப் படைகளின் வருகை தொடர்பில் இந்தியா அறிக்கை விட மறுப்பினும் அந்நாடு கவலையுடனேயே இருக்கின்றது. அது உடனடியாக உதவிக் கரம் நீட்ட முன்வந்தாலும் அமெரிக்கப் படைகளின் வருகை பற்றி ஊடகங்களின் கவனம் அவர்கள்மீது திரும்பவே செய்தது. அவர்கள் இங்கு தங்கியிருப்பது பணிகள் நிறைவேறும் வரையில் மட்டுமே என்றாலும், எப்போது திரும்புவது என்பது பற்றி சரியாகக் கூறப்படவில்லை.

இந்த நிலையில் தற்போதைய சந்தர்ப்பம் சனாதிபதிக்கும், பிரதமருக்கும் நாட்டைக் கட்டியெழுப்புவதற்குக் கிடைத்த பொன்னான வாய்ப்பாகும். ஆயினும் காரியங்கள் சரியான முறையில் நடைபெறாது போனால் இன்னும் சில மாதங்களில், அரசியலில் பாரிய மாற்றங்கள் ஏற்படஇடமுண்டு.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# ஆழிப்பேரலைகள் முல்லையில் நடத்திய கோரத்தாண்டவம்

பகுதி-03



''எங்கள் மீட்பு நடவடிக்கை நடந்துகொண்டிருந்த வேளை ஒரு துயரச் சம்பவம் அது எங்களை பெரிதும் பாதிக்கவைத்தது. அந்தத் துயரச் சம்பவத்தை என்னால் எப்படிக் கூறுவது என்றே தெரியவில்லை. தாயும், தந்தையும்; தந்தைக்கு ஒரு 32 வயது தான் இருக்கும். அவர்கள் இருவரும் ஒரு ஆறுவயது மதிக்கத்தக்க பிள்ளை ஒன்றை தூக்கிக் கொண்டு எங்களிடம் ஓடி வந்தார்கள். வந்தவர்கள் "தம்பியவ இது என்ர பிள்ளை ராசா கடல் அடிக்கேக்க நான் பத்திரமா அணைச்சுக்கொண்டு ஓடிவந்தனான் ஆனால் கடல் என்னட்ட இருந்து என்ர தெய்வத்தைப் பறிச்சுப் போட்டுது. இப்பத்தான் எடுத்தனான்ரா. இதில நிக்கிற எல்லாரும் சொல்லியினம் பிள்ளையின் உயிர் போட்டுது எண்டு ஆனால் என்ரபிள்ளை சாகவில்லை. அவள் உயிரோடதான் இருக்கிறாள். நீங்கள் எண்டாலும் என்ர பிள்ளைக்கு உயிர் இருக்கோ எண்டு பார்த்துச் சொல்லுங்கோ...'' என்று எங்களின் பதிலைப் பார்த்துக் கதறிக்கொண்டிருந்தனர். என்னசெய்வது அந்தப் பிள்ளை இறந்துபோய்விட்டது. ஆனால் பெற்றோர் அதையும் மறுக்கிறார்கள். நாங்கள் வடிவாகப் பார்த்தோம் பிள்ளை இறந்துவிட்டது. விடயத்தை தந்தையாரிடம் மெதுவாகச் சொன்னோம் அவர்கள் இருவரும் துயரத்தின் விளிம்பில் நின்று கத்திக்குளறிக்கொண்டிருந்தனர், எங்களால் என்ன செய்யமுடியும். அவர்களைப் பார்த்ததும் எனக்கு தலை சுற்றியது. இந்த மெய்சிலிர்க்கவைக்கும் துயரச்சம்பவத்தை எமக்குக் கூறியவர் மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்ட தமிழீழக் காவல்துறையின் தலைமைக்காவலர் க.குணராசா. அவர் தனது அனுபவத்தைத் தொடர்ந்து பகிர்ந்துகொள்கிறார்.

சம்பவம் நடைபெற்ற சமயம் நான் புதுக்குடியிருப்பு காவல் பணிமனையில் கடமையாற்றிக் கொண்டிருந்தேன் நேரம் 8.50 மணியிருக்கும் எங்களது பணிமனைப் பொறுப்பாளர் எங்களை அழைத்து முல்லைத்தீவில் கடல் அனர்த்தம் நடைபெற்று விட்டது. உடனடியாக கடமைக்குப் போக வேண்டும் என்றார். உடனே நானும் யோகச்சந்திரன் என்ற உறுப்பினரும் கடமைக்குத் தயாராகினோம். நாங்கள் வீதிக்கு வருகின்றபோது மக்கள் பெரும் திரளாக ஒரு இராணுவ இடப் பெயர்வின் போது எப்படி இடம் பெயர்வார்களோ அப்படி கையில் அகப்பட்ட பொருட்களுடனும், வெறுங்கையுடனும், அரைகுறை ஆடைகளுடனும் புதுக்குடியிருப்பை நோக்கி ஓடிக்கொண்டிருந்தனர்.

இவ்வாறு ஓடிக்கொண்டிருந்த மக்களிடம் முல்லைத்தீவின் நிலைமை எப்படி என்று கேட்டோம் அவர்கள் சொன்னார்கள் ''சனசனம் அங்கால கடலுக்க அகப்பட்டுப்போட்டுது நாங்கள் ஓடுகிறோம்'' என்று கூறிக்கொண்டு நிற்காமல்போய்க் கொண்டிருந்தனர்.

உடனடியாகவே இந்த விடயத்தை பொறுப்பாளரிடம் தெரியப்படுத்தினோம் அவர் கூறினார். வைத்தியசாலைக்கு முன்பாக நிற்கின்ற தனியார் வாகனக்காரருடன் கதைத்து அங்கிருக்கின்ற மக்களை அதாவது குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் ஆகியோரை ஏற்றிவருமாறு அனுப்புங்கள் என்றார். உடனே நாங்கள் அவர்களுடன் போய்க் கதைத்தோம் அவர்கள் மனம் சுழிக்காமல் உடனடியாகவே வெளிக்கிட்டு போய் நடந்துவந்து கொண்டிருந்த சனத்தை ஏற்றி இறக்கிக் கொண்டிருந்தார்கள். இதனை ஒழுங்குபடுத்தி விட்டு நாங்கள் முல்லைத்தீவு நோக்கிப் புறப்பட்டோம். வட்டுவாகல் பாலத்துக்கு கிட்டப் போய்விட்டோம் அங்கு கூடிநின்ற சனம் எங்களை "தொடர்ந்தும் போக வேண்டாம் ஆபத்து'' என்று கூறி மறித்தார்கள். வட்டுவாகல் பாலத்தின் கரையை போய்ச் சேர்ந்துவிட்டோம். வட்டுவாகல் பாலத்துக்கு கடல் கரைப்பக்கமாக உள்ள பனைகள், பற்றைகள், முட்கள் எல்லாம் வந்து பாலத்தில் குவிந்து ஒரு வித்தியாசமான இடமாகப் பாலம் காட்சியளித்தது.

மறுகரையில் நின்றவர்கள் எங்களைக் கண்டு கூப்பிட்டார்கள் நாங்கள் போய் அவர்களுடன் சேர்ந்தோம். அவர்களின் நிலையை பார்க்கும் போது பயங்கரமாக இருந்தது. குடியிருப்புக்கள், மரங்கள், கஞ்சல்கள் எல்லாம் குவியல் குவியல்களாக இருந்தன. அதனூடாக மீட்பு நடவடிக்கைகளை செய்து கொண்டு மெதுவாக நகர்ந்து கொண்டிருந்தோம். செல்வபுரத்தை வந்தடைந்தோம் ஆங்காங்கே மரங்களின் கீழும் கடைகளின் கீழும் வயது முதிர்ந்த ஐயாக்களும், அம்மாக்களும் நனைந்து விறைத்து நடுங்கிக் கொண்டிருந்தார்கள். நீண்டகாலம் கடலுடன் கூடி இருந்து நீச்சலில் பிரசித்தி பெற்ற பலநூறு பேர் கடலின் மூர்க்கத்தனமான குமுறலுடன் ஈடுகொடுத்து நிற்கமுடியாமல் கடலடியின் வேகத்துடன் ஈடுகொடுக்க முடியாமல் பாதிக்கப்பட்டும், காயமடைந்தும் அடுத்தபடியாக எதுவும் செய்ய முடியாமல் அகப்பட்ட இடங்களில் படுத்துக் கிடந்தார்கள். அவர்களின் உடலில் ஆடைகள் கூட முழுமையாகக் காணப்படவில்லை. சில இளம் வயதினர் மரங்களின் மேல் ஏறி இருந்தார்கள்.

இவற்றை எல்லாம் தாண்டி முல்லைத்தீவை நோக்கி நாங்கள் போய்க் கொண்டிருந்தோம். எங்கள் கண்பார்வைக்கு எட்டிய தூரத்தில் சில முதியவர்களும், சிறுவர்களும்; குழந்தைப்பிள்ளைகளும் கூடி நிற்பது தெரிந்தது. எங்கள் சீருடையைக் கண்டதும் தாய், தந்தையருடன் இருந்த அந்த சின்னப்பிள்ளைகள் எல்லாம் ஒன்றாக கூடி ஓடி வந்து "மாமாக்கள் எங்களை காப்பற்ற மாட்டீங்களா...?.'' என்று அழுது கொண்டு கேட்டார்கள். அந்த நிலையில் அந்தச் சூழலில் இளம்பிஞ்சுகளின் இந்தக் கேள்வி எங்கள் நெஞ்சைப் பிளந்து இதயத்தைத் தாக்குவது போல இருந்தது. இந்தப்பிள்ளைகளின் அன்பான கேள்வி எங்களை ஆழமாகப் பாதித்துவிட்டது நாங்கள் நடந்துதான் போனோம். அவர்களை பாதுகாப்பாக ஏற்றி அனுப்புவதற்குரிய எந்த வசதிகளும் உடனடியாக எங்களிடம் இருக்கவில்லை. உடனடியாகவே பின் தளத்துக்குத் தகவலை அனுப்பினோம் தகவல் அனுப்பிய உடனேயே போராளிகளும், காவல்துறையினரும், விசேட படையணியினரும் சேர்ந்து வீதியைச் சீர்ப்படுத்தி இவர்களை மீட்பதற்கு வாகனங்களை அனுப்பிக் கொண்டிருந்தனர்.



## மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டோரின் பார்வையில்...

காயப்பட்டவர்களை அகற்றும் நடவடிக்கையின் போது பெருமளவான காயமடைந்தவர்களை நாங்கள் மீட்டோம். சிலர் மோசமாகக் காயமடைந்திருந்தனர். காயமடைந்து உயிர் தப்பியவர்களில் ஆண்கள் தான் அதிகமாக இருந்தார்கள் பெண்கள், வயோதிபர்கள், சிறுவர்களை நாங்கள் காயமடைந்த நிலையில் இந்தப் பகுதிகளில் மீட்கவில்லை இவர்கள் சடலமாகத்தான் இருந்தார்கள்.



அப்படியே நாங்கள் யூதா கோயிலுக்கு அருகில் போய்க் கொண்டிருந்தோம் அப்போது ஒரு 60 வயது மதிக்கத்தக்க ஐயா ஒருவர் "கடல் அடித்து விட்டது தண்ணி வந்து கொண்டிருக்கிறது எல்லோரும் ஓடுங்கோ" எண்டு கத்தியபடி கால் தெறிக்க ஓடிவந்தார். அவரை போகுமாறு சொல்லிவிட்டு அங்கிருந்த காயக் காரரை கோயிலடியில் இருந்த உயரமான பகுதிக்கு அனுப்பினோம். அவர்களை அனுப்பிவிட்டு தேடுதல் நடத்தியபோது தலை மாத்திரம் வெளியில் தெரியும் அளவு தண்ணீருக்குள் முட் கம்பியில் தலைமுடி சிக்கிய நிலையில் பெண் ஒருவர் குற்றுயிரான நிலையில் இருந்தார். அவரின் தலைமுடியை சிக்கெடுத்து மேட்டுப் பகுதிக்குக் கொண்டு சென்றோம். அந்தப்பிள்ளையை அதில் இருந்து தூக்கிய சில நிமிடங்களில் கடல் மீண்டும் பெருகி அந்த இடம் தண்ணீருக்குள் அமிழ்ந்து விட்டது. அவரை நாங்கள் மீட்கும் போது வாயும் பல்லும் அடித்து விறைத்திருந்த நிலையில் எதுவுமே கதைக்க முடியாமல் இருந்தார்.நாங்கள் அவரை மீட்டிரா விட்டால் அவர் உயிரிழந்திருப்பார்.

அப்படியே யூதா கோயிலுக்குள் போய்ப் பார்த்தோம். அந்தக் கோயிலுக்குள் மூன்று வயது மதிக்கத்தக்க மூன்று பெண் குழந்தைகள் கற்களால் மூடப்பட்ட நிலையில் இறந்து கிடந்தார்கள் பச்சிளம் பிஞ்சுகள் ஒன்றை ஒன்று அணைத்தபடி அப்படியே கிடந்தன. அதனையும் தாண்டி வெளியில் வந்தபோது ஒரு மினித்தியேட்டர் இருந்தது அதற்கு முன்னால் உள்ள வீட்டில் இருந்து ஒரு அம்மா அவருக்கு 65 வயது வரும் அவர் எங்களைக் கூப்பிட்டார். உடனேயே ஓடிப்போனோம் அவரது வீட்டுக்கதவுகள் எல்லாவற்றையும் கடல் அலை மூர்க்கமாக மோதி இறுகச் சாத்திவிட்டிருந்தது. அதனால் அவரால் வெளியில் வர முடியவில்லை ஏதோ ஒருவாறு அவர் தப்பிவிட்டார். உடனே கதவை உடைத்து அவரை மீட்டு வெளியில் எடுத்தோம் காயப்பட்டவர்கள், இறந்தவர்கள் எல்லோரையுமே ஒரே வாகனத்தில் தான் ஏற்றி பாதுகாப்பான இடத்துக்கு அனுப்பினோம். இந்த நிலையில் விடுமுறையில் வீட்டுக்குச் சென்றிந்த எஸ்.ரி.எவ். உறுப்பினர் ஒருவர் காலில் மூன்று அங்குலத்துக்கும் மேலாக கம்பிகள் கிழித்து தசை தொங்கிக் கொண்டிருந்த போதிலும் இரத்த ஓட்டத்தை கட்டுப்படுத்துவதற்காக ஒரு சிறிய கயிற்றை கட்டிக்கொண்டு மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்.



இப்படியே நாங்கள் முல்லைத்தீவை நோக்கி வருவதற்கு முயன்றோம். யூதா கோயிலடியில் நின்று பார்த்தபோது முல்லைத்தீவில் மரங்கள் கட்டடங்கள் எல்லாமே இடிந்தும் , முறிந்தும் இருந்தது. நான் செந்தளிர் நிறுவனத்தைப் பார்த்தேன் அது இருந்த இடமே தெரியவில்லை. செந்தளிரில் நிறைய சின்னப்பிள்ளைகள் இருந்தவர்கள். அந்த இடத்துக்குப் போகவேணும் என்று முயன்றோம்.ஆனால் பெருமளவு தண்ணீர்பாய்ந்து கொண்டிருந்தது நடமாட்டம் எதுவுமே தெரியவில்லை.ஆத்துக்கரையோடு அந்த இல்லம்

**அ.லோகீசன்**

இருந்ததால் அவர்கள் தப்புவதற்கான சந்தர்ப்பம் குறைவாக இருந்தது.அப்படியே சுற்றி முல்லைத்தீவு மத்திய விளையாட்டு மைதானத்து வீதியால் வந்து முல்லை நகரை அடைந்தோம்

முல்லைநகரில் தப்பியவர்கள் சிலர் அங்காங்கே திகிலடைந்து நின்றார்கள். அவர்களை வெளியால் அனுப்புவதற்கு வெற்று மண்ணெண்ணெய் பரலைத் தொடுத்துக்கட்டி அதில் ஏற்றியும் மீன்பிடிப் படகில் ஏற்றியும் முள்ளியவளை வீதியை குறுக்கறுத்துப் பாய்ந்த இடுப்பளவு நீரில் அவர்களைப் பத்திரமாக அனுப்பினோம். இதை முடித்துக்கொண்டு செந்தளிர் நோக்கி விரைந்து வந்து கொண்டிருந்தோம். அதனை அடுத்துத் தருகிறோம்.

(தொடரும)

# சண்டே லீடர் ஆசிரியர் நீதிமன்றத்தில் சரண்

சண்டே லீடர் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லசந்த விக்கிரம துங்க மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் சரணடைந்துள்ளார்.

தனது சட்டத்தரணிகள் ஊடாக நேற்றுக்காலை நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். இவரை கைது செய்யுமாறு நேற்று முன்தினம் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. வெளிநாடு சென்றிருந்த அவர் உரிய தினத்தில் இலங்கை வரமுடியாது போனமையால் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் ஆஜராக முடியவில்லையென அவரின் சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

தனக்கு எதிராக கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் வழங்கு ஒன்று தாக்கப்பட்டிருந்தபோதிலும் அதற்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் சண்டேலீடர் பத்திரிகையில் செய்தி வெளியிட்டதன் மூலம் அவர் நீதிமன்றத்தை அவமதித்துள்ளதாக சிறிலங்கா கிரிக்கெட் சபையின் முன்னாள் தலைவர் திலங்க சுமதிபாலாவை தாக்கல் செய்த மனுவின் மூலம் இவ் உத்தரவு பிறப்பிக்கப்பட்டமை தெரிந்ததே.

## விடுமுறை எடுக்காத அரச ஊழியர்களுக்கு —

## ஓய்வூதியத்துடன் விடுமுறை எடுக்காத நாள் சம்பளம்

(கொழும்பு)

வருடாந்த விடுமுறைகளை எடுக்காத சகல அரச ஊழியர்களும் ஓய்வுபெறும் பொழுது விடுமுறை எடுக்காத நாட்களின் வேதனங்களை ஓய்வூதிய சம்பளத்தில் சேர்த்துக் கொள்ளப்படும் என உள்நாட்டலுவல்கள் அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித் துள்ளார் இதற்கென அமைச்சர் குழுவின் அங்கீகாரம் கிடைத் துள்ளதெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## United Nations Development programme

UNDP

Transition Programme for Srilanka

The following vacancies currently exist:

**FIELD MONITOR (1) Community Based Development-Kilinochchi Field Office**

Under the supervision of the Field Coordinator:

Conduct regular supervision of project locations through field visites and support the Field office for assessment of overall Transition programme implementation status.

Contributes to the preparation of status and progress reports by providing information, preparing tables and drafting selected sections; Work closely with the Government Agent and other UN and International Agencies;

Mobilize and support community based Organizations for possible establishment 0f revolving loan funds and livelihood recovery activities; Assist in identifying the training needs of relevant government Agencies;

Assist in identifying the traning needs of relevant government agencies.

Assist in the Organization of training programmes, as and when required;

Assisting in collating reports and in preparation of weekly/monthly progress reports and other documentation;

Perform any other duties as required.

**Required Qualification:**

- Bachelors degree qualifications with experience in Socio-Eco nomic community development.
- Good communication skills in English and Tamil.
- Computer literacy
- Good team player.

**FIELD MONITOR (2) Infrastructures-Kilinochchi Field Office**

Under the supervision of the Field Coordinator.

Conduct regular supervision of project locations through field visits and support the Field office for assessment of overall Transition programme implementation status;

Contributes to the preparation of status and progress reports by providing information,drafting selected sections of it and supervising infrastructure activities in the field.

Work closely with the Government Agent and other UN and international agencies;

Mobilize and support Community Based Organizations for possible Involvement in infrastructure activities.

Assist in Organization of training programmes, as and when required;

Assist in the identifying the training needs of relevant government agencies;

Assisting in preparation of estimates, Auto CAD drafting, progress reports and other documentation;perform any other duties as required.

**Required Qualification:**

- NDT (Civil) or equivalent qualification with three years relevant experience.
- Good communication skills in English and Tamil.
- Computer literacy
- Good team player.

**FEMALE CANDIDATES ARE STRONGLY ENCOURAGED TO APPLY**

* Deadline for application for both positions is 28th January, 2005

* All applications should be sent to:UNDP, No.7 KUmarswamyRoad, Ganeshapuram, Kilinochchi. (5572)

## நீங்காத நினைவில் நான்காம் ஆண்டு — பன்னிரண்டாம் ஆண்டு நினைவலைகள்





**இராசலிங்கம் மயூரன்**
தோற்றம்:-23.04.1991
மறைவு:-20.01.2001

**இராசலிங்கம் மயூரி**
தோற்றம்:-25.10.1992
மறைவு:-11.04.1993

**திதி:-22.01.2005**

ஒரு கொடியில் மலர்ந்த
இரு மலர்களே!
இருவருமே இருளில் மூழ்கி
ஒளியாகி விட்டீரே!
சித்திரையில் பூத்த சிரேஷ்ட புத்திரனே
நீர் பத்தாவது அகவையிலே
இறைவனுக்கு
முத்திரை பதிக்கச் சென்றனையோ!
மயூரன் குட்டி

அன்புத் தெய்வங்களே!
கண்ணோரம் நீர் கசிந்து முடியவில்லை
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
மாறாத நினைவு தனை மனதினிலே
வரைந்து கொண்டு தவறாமல்
உங்களையே தினம் தினம்
எண்ணுகின்றோம் செல்வங்களே!
இருவருமே இறைவனுடன்
இணைந்து இறைஞ்சிடுவீர் எம்மவர்க்காய்

எங்கள் அருமைச்செல்வங்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.
"ஓம் சாந்தி" "ஓம் சாந்தி" "ஓம் சாந்தி"

தகவல்: ச.கிருஷ்ணபிள்ளை (தாத்தா)
சமாதான நீதிபதி,
இல:322, ஸ்கந்தபுரம்
கிளிநொச்சி (5570)

உங்கள் பிரிவால் துயருறும்
அப்பா,அம்மா,
தாத்தா குடும்பத்தினர்

# தமிழீழ வைப்பகம்

## பணிநிலை வேண்டுகை

தமிழீழ வைப்பகத்தினால் கீழ்க்காட்டப்படும் பணிநிலைகளிற்குத் தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**01. பணிநிலை :-** அலுவலர் (பயிலுநர்)

**தகைமைகள் :-** ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் ஏற்றுக்கொள்ளக்கூடிய பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.
அல்லது
ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில் நுட்பக்கல்லூரி ஒன்றில் உயர் தேசியக்கணக்கியல் டிப்ளோமா சான்றிதழைப் (HNDA) பெற்றிருத்தல் வேண்டும்.

**மாதாந்த ஊதிய அளவுத்திட்டம் :-** 4,500 + 6,000

**அகவை எல்லை :-** 32 வருடங்களுக்கு மேற்படாதவராக இருக்க வேண்டும்

**02. பணிநிலை :-** அலுவலக உதவியாளர் தரம் -03

**தகைமைகள் :-** i. க.பொ.த.[சாதாரண தர] தேர்வில் கணிதம் [42/கணிதம் II], தமிழ் உட்பட குறைந்தது 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
ii. ஆண் பாலார் மட்டும்

**மாதாந்தஊதியம் :-** $\frac{2,870 - 4,070}{60 \ X \ 20} + 6,000$

**அகவை எல்லை:-** 18 - 25 வருடங்கள்

வேண்டுகைகள் யாவும் உரிய படிவத்தில் முழுமையாக நிறைவு செய்யப்பட்டுக் கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் **"ஆட்சேர்ப்புக்கான வேண்டுகை -அலுவலர் (பயிலுநர்)". "ஆட்சேர்ப்புக்கான வேண்டுகை - அலுவலக உதவியாளர் தரம் -03 "** எனக் குறிப்பிடப்பட்டு 2005.01.31 ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்பாகக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும். வேண்டுகைப் படிவங்களையும், மேலதிக விளக்கங்களையும் தமிழீழ வைப்பகத்தின் எல்லாக் கிளைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

**மனிதவள மேலாளர்,**
**மனிதவளப்பகுதி,**
**நடுவப்பணியகம்,**
**தமிழீழ வைப்பகம்.**

**குறிப்பு :-**
01. முழுமையாக நிறைவு செய்யப்படாத, சான்றிதழ்கள் இணைக்கப்படாத வேண்டுகைகள் நிராகரிக்கப்படும்.
02. நிறைவு செய்யப்பட்ட வேண்டுகைகளை பதிவுத்தபாலில் [**மனிதவள மேலாளர், மனிதவளப்பகுதி, நடுவப்பணியகம், தமிழீழ வைப்பகம், யாழ் சாலை கரடிப்போக்கு, கிளிநொச்சி**. எனும் முகவரிக்கு) நேரடியாகவோ அல்லது தமிழீழ வைப்பகக் கிளைகளினூடாகவோ அனுப்பி வைக்கலாம்.

(சி-11079)

# காஷ்மீர் எல்லைப்பகுதியில் 10 மணிநேரம் கடும் சண்டை!


## - மோதலில் 5 தீவிரவாதிகள் பலி

(புதுடில்லி)

**காஷ்மீர் கட்டுப்பாட்டு எல்லைக்கோட்டு பகுதியில் ஊடுருவ முயன்ற பாகிஸ்தான் தீவிரவாதிகளுக்கும் இந்திய எல்லைப் பாதுகாப்புப் படையினருக்கும் இடையில் நடந்த சண்டையில் 5 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.**

இது குறித்து ஜம்மு பிராந்திய எல்லைப் பாதுகாப்புப் படை ஐ.ஜி, பி.டி.சர்மா கூறியதாவது, பூஞ்ச் மாவட்டம் மென்தர் செக்டார் பால்நொய் என்ற இடத்தில் கட்டுப்பாட்டு எல்லைக்கோட்டு பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை 1.40 மணிக்கு பாகிஸ்தான் தீவிரவாதிகள் ஏழுபேர் ஒரு குழுவாக இந்தியப் பகுதிக்குள் ஊடுருவ முயன்றனர். எல்லைப் பகுதியை தீவிரவாதிகள் நெருங்கும் வரை அமைதியாக இருந்தனர். பின்னர் தீவிரவாதிகளை நோக்கி சரமாரியாக துப்பாக்கிச் சூடு நடத்தினர். தீவிரவாதிகளும் பதில் தாக்குதல் நடத்தினர்.

சுமார் 10 மணி நேரம் நீடித்த இந்த துப்பாக்கிச் சண்டையில் இந்தியத் தரப்பில் ஒருவர் காயமடைந்துள்ளார். இறுதியில் ஐந்து தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்ட தீவிரவாதிகள் ஐந்து பேரும் அதி நவீன ஆயுதங்களை வைத்திருந்தனர். அவர்கள் இருந்த இடத்தில் இருந்து ஏ.கே.ரக துப்பாக்கிகள் ஐந்து, ஒரு ரைபிள், துப்பாக்கிக் குண்டுகள், 29 கையெறி குண்டுகள் மற்றும் வெடிபொருட்கள் மீட்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.



கோவையில் நேற்று முதல் 21ஆம் திகதி வரை இராணுவத்துக்கு ஆட்கள் தேர்வு செய்யும் பணி நடக்கிறது. சேலம், தர்மபுரி, திண்டுக்கல், தேனி மற்றும் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர்கள் இராணுவத்தில் சேர கோவையில் குவிந்தனர். அவர்கள் கோவை நேரு விளையாட்டு மைதானத்தில் நேர்முக தேர்வுக்காக காத்திருந்த காட்சி.

# சங்கரமட மேலாளரிடம் 15 வெற்றுத்தாள்களில் பொலிசார் கையொப்பம் வாங்கினர்

## - சங்கரமட வக்கீல் தெரிவிப்பு


சங்கரராமன் கொலை வழக்கில் கைதான இளைய மடாதிபதி விஜயேந்திரர் நேற்று முன்தினம் காஞ்சிபுரம் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

அவரை பொலிஸ் காவலில் எடுப்பது தொடர்பான விசாரணையின் போது அரசு வக்கீல் தியாகராஜன் கூறுகையில், 'ரவிசுப்பிரமணியம் கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் விஜயேந்திரர் 2ஆவது குற்றவாளியாக சேர்க்கப்பட்டு இருப்பதாகவும், அவரிடம் கொலைச் சதி, கொலையாளிக்கு பணம் வழங்கல் பற்றிவிசாரிக்க அனுமதிக்க வேண்டும்' என்று கேட்டுக் கொண்டார்.


சங்கரராமன் கொலை வழக்கில் ரவி சுப்பிரமணியம் தான் 2ஆவது குற்றவாளியாக சேர்க்கப்பட்டு இருந்தார். இப்போது விஜயேந்திரர் 2ஆவது குற்றவாளியாக சேர்க்கப்பட்டு இருப்பது குறித்து சங்கரமட வக்கீல் தியாகராஜனிடம் கருத்துக் கேட்ட போது அவர் கூறியதாவது:-

இந்த வழக்கில் விஜயேந்திரர் 25 ஆவது நபராக கைது செய்யப்பட்டார். அவரை 2ஆவது குற்றவாளியாக சேர்த்து இருப்பது ஒன்றும் முக்கியம் அல்ல. பொலிசார் யாரை வேண்டுமானாலும் வரிசைப்படுத்தி குற்றப்பத்திரிகையில் சேர்க்கலாம். அதற்கு அவர்களுக்கு அதிகாரம் உள்ளது. இதேபோல் விஜயேந்திரரை நம்பர் கொடுத்து வரிசைப்படுத்தி இருக்கிறார்கள்.

சங்கரமட மேலாளர் சுந்தரேசனிடம் 15 வெற்றுத்தாளில் கையெழுத்து வாங்கியிருப்பதை நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்து இருக்கிறார். பொலிசார் அவரிடம் கையெழுத்து வாங்கும் போது 2 பேப்பரில் மட்டும் கையெழுத்து போட்டால் போதாதா? என்று கேட்டார். அதற்கு பொலிசார் உயர் அதிகாரிகளுக்கு நகல் அனுப்ப வேண்டும்அதற்கு தான் 15 பேப்பர்கள் தேவைப்படுகிறது. என்று கூறினர்.



அதை இப்போது சுந்தரேசன் அய்யர் நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு வந்திருக்கிறார். இவ்வாறு வக்கீல் தியாகராஜன் கூறினார்.



தமிழகத்தின் பொள்ளாச்சி மலேகவுண்டன்புரம் கிராமத்திற்கு முதன் முறையாக நேற்றுமுன்தினம் முதல் சேவையை ஆரம்பித்துள்ள அரச பயணிகள் பேருந்தை அக்கிராம மக்கள் ஆர்வத்துடன் பார்க்கின்றனர்.

# கடல் கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு மத்திய அரசு சலுகை


## - உயர்மட்டக் கூட்டத்தில் தீர்மானம்

(புதுடில்லி)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு கல்விக் கட்டணம், தேர்வுக்கட்டணம் உள்ளிட்ட பல சலுகைகளை வழங்க மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது. மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சர் அர்ஜீன் சிங் தலைமையில் உயர் மட்டக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் டில்லியில் நடந்தது. கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து நேற்று வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது;

சுனாமி என்ற கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு செமஸ்டர் கட்டணம், தேர்வுக் கட்டணம், நுழைவுத் தேர்வுக் கட்டணம் ஆகியவற்றில் இருந்து விலக்கு அளிக்கப்படும். இக்கட்டணங்கள் ஏற்கனவே மாணவர்களால் செலுத்தப்பட்டிருந்தால் மத்திய கல்வி வாரியம் (சி.பி.எஸ்.இ.) அல்லது பல்கலைக்கழக மானியக் குழு(யு.ஜி.சி.) ஆகியவற்றிடம் இருந்து திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். மேலும் சி.பி.எஸ். அமைப்பால் வரும் மார்ச் 1ஆம் திகதி முதல் ஏப்ரல் 1ஆம் திகதி வரை நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த பத்தாம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்புத் தேர்வுகள் விரும்பும் மாணவர்களுக்குத் தள்ளிவைக்கப்படும். அத்தகைய மாணவர்களுக்கு ஏப்ரல் 11 முதல் 28 ஆம் திகதி வரையிலும், மே 19 முதல் 31 ஆம் திகதி வரையிலும் தேர்வுகள் நடத்தப்படும் .தேவைப்படும் இடங்களில் எழுத்துத் தேர்வுக்குப் பிறகு செய்முறைத் தேர்வுகள் நடத்தப்படும்.

மாநில அரசுகளும் இத்தகைய நடைமுறையை பின்பற்றும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. தேவைப்படும் இடங்களில் பல்கலைக் கழகங்களே தேர்வுகளை மாற்றி அமைத்து அறிவித்துள்ளன.



அந்தமானில் சுனாமி தாக்குதலுக்குப் பிறகு கடலில் மீன்பிடிக்கச் செல்ல மீனவர்கள் தயங்கினார்கள். இப்போது அவர்கள் மீண்டும் மீன் பிடிக்க கடலுக்குச் செல்லத் தொடங்கி இருக்கிறார்கள். அவர்கள் பத்திரமாகத் திரும்பி வர வேண்டும் என்பதற்காக கடற்கரையில் பெண்கள் சிறப்புப் பிரார்த்தனை நடத்திய காட்சி


# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர் திரு.கி.சாந்தகுமார் அல்லது (தாயகன்) அவர்களின் தந்தையார் துகிருஷ் ணபிள்ளை மற்றும் ஆசிரியரது சகோதரி, பிள்ளைகள் ஆகியோர் சுனாமி கடல் பேரனர்த்தத்தால் இறந்த செய்தி கேட்டு எமது பாடசாலை சமூகம் மிகுந்த வேதனையடைகிறது. மேற்படி சம்பவத்தில் இறந்து போன அவர்களதும் ஏனைய அனைத்துப் பொதுமக்களதும் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதோடு துயருற்றி ருக்கும் குடும்பத்தார்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
மு/ஐயன்கன்குளம் அ.த.க.பாடசாலை

(சி.11210)



# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர் திரு.கா. கருணாமூர்த்தி அவர்களின் தாயார் கார்த்திகேசு - நாகம்மா அவர்கள் 16.01.2005 அன்று இந்தியாவில் காலமான செய்தி கேட்டு எமது பாடசாலை சமூகம் மிகுந்த வேதனையடைகிறது. அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதோடு பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தவர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
மு/ஐயன்கன்குளம் அ.த.க.பாடசாலை

### வி.பி.முக்கோண கிரிக்கெட்போட்டி

# கம்றான் அக்மல் சிறப்புத் துடுப்பாட்டம்

# பாகிஸ்தான் அணிக்கு இலகு வெற்றி



மூன்று நாடுகள் கலந்து கொள்ளும் வி.பி.கிண்ண முக்கோண கிரிக்கெட் தொடரின் மூன்றாவது ஒரு நாள் போட்டியில் பாகிஸ்தான் அணி 6 விக்கெட்டுக்களால் மேற்கிந்தியத் தீவை தோற்கடித்தது.

பிறிஸ்பேனில் நேற்று நடைபெற்ற மேற்படி போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி மேற்




கிந்தியத் தீவை துடுப்பெடுத்தாட அழைத்தது.

இதன்படி முதலில் துடுபபெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவு சிறப்பாக துடுப்பெடுத்தாடி நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் 5 விக்கெட்டுக்களை இழந்து 273 ஓட்டங்களை பெற்றது.

துடுப்பாட்டத்தில் கிறிஸ் கெய்ல்ஸ் 82 ஓட்டங்களையும்,சர்வான் 76 ஓட்டங்களையும் அணித் தலைவர் லாறா 39 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்று ஆட்டமிழந்தனர்.

பந்து வீச்சில் நவீட் உல் ஹசன் இரண்டு விக்கெட்டுக்களையும்,கபீஸ்,ரபீக், மொகமட்



தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களை கைப்பற்றினர்


பதிலுக்கு 274 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பாகிஸ்தான் ஆரம்ப துடுப்பாட்ட வீரரும் விக்கெட் காப்பாளருமான கம்றான் அக்மலின் அபார ஆட்டத்தின் மூலம் வெற்றி இலக்கை இலகுவாக்கியது அவர் 125 பந்துகளை எதிர்கொண்டு 124 ஓட்டங்களை குவித்தார். இவரைவிட சொகைப்மாலிக் 60 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழக்க அணித் தலைவர் இன்சமாம் உல்ஹக் அதிரடியாக ஆடி 51 பந்துகளை



எதிர்கொண்டு 62 ஓட்டங்களை ஆட்டமிழக்காது குவிக்க 47 ஓவர் நிறைவில் பாகிஸ்தான் வெற்றி இலக்கை அடைந்தது. பந்து வீச்சில் டிலோன் இரண்டு விக்கெட்டுக்களையும்,பிரட்சோவ் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனாக பாகிஸ்தானின் அக்மல் தெரிவானார்.

மேற்படி முக்கோணத் தொடரில் மூன்று போட்டிகள் நிறைவடைந்துள்ள நிலையில் அவுஸ்தி



ரேலிய அணி இரண்டு போட்டிகளிலும் பாகிஸ்தான் ஒரு போட்டியிலும் வெற்றி பெற்றுள்ளன.

# கிரிக்கெட் வீரர்களின் தரவரிசைஐ.சி.சி உத்தியோக பூர்வமாக அறிவிக்கும்



சர்வதேச கிரிக்கெட் சபை முதல் முதலாக கிரிக்கெட் வீரர்களின் தரவரிசையை உத்தியோக பூர்வமாக அறிவிக்கவுள்ளது. அத்துடன் L.G. எனப்படும் உலக இலத்திரனியல் சாதன உற்பத்தி நிறுவனமும் தரவரிசையை அறிவிக்கவுள்ளது.

இதனை இந்தியாவின் முன்னணி வீரரான கவஸ்காரும் வரவேற்றுள்ளார்.

முன்னர் 2001ஆம் ஆண்டு டெஸ்ட் போட்டிகள் தரவரிசை ஆரம்பமானது அது அடுத்த ஆண்டு ஒருநாள் போட்டிகளுக்காக அறிவிக்கப்பட்டது இந்த விடயம் பல வருடங்களாக பரிசீலிக்கப்பட்டு வந்ததாகவும் தற்போது இது நடைமுறைக்கு வந்திருப்பது. மிக்க மகிழ்ச்சியளிப்பதாகவும் இந்திய அணித்தலைவர் கங்குலி கூறுகிறார்.

தற்போது இறுதியாக பாகிஸ்தானை 3-0 என்ற கணக்கில் டெஸ்ட் போட்டியில் வென்ற அவுஸ்திரேலியா முன்னணி வகிப்பதுடன் நியுசிலாந்தை ஒருநாள் போட்டியில் வென்று ஒருநாள் போட்டியிலும் முதலாவதாக இருக்கின்றது. டெஸ்ட் துடுப்பாட்டத்தில் ராகுல் ராவிட்டும் பந்துவீச்சில் கிளன்மெக்ராத்தும் முன்னணி வகிக்கின்றனர்.

# 4 ஆவது டெஸ்ட் தோல்விக்கு பரிகாரம் 5ஆவது டெஸ்ட் போட்டியில் வெற்றிபெறுவதே

—ஸ்சிமித்



இங்கிலாந்து அணியுடனான 4ஆவது டெஸ்ட் போட்டியில் தோல்வியை சந்தித்ததால் தென்னாபிரிக்க அணி 5ஆவது போட்டியில் திறமையாக ஆடி இந்தத் தோல்விக்கு பரிகாரம் காணும் என நம்புவதாக அணித்தலைவர் கிரகம் ஸ்மித் தெரிவித்தார்.

இந்தத் தொடர் தமக்கு ஒரு வீழ்ச்சியையும் முன்னேற்றத்தைத்யும் தருவதாகக் கூறிய அவர் இங்கிலாந்து வீரர்கள் திறமையாக ஆடுவதாக் கூறினார். இந்தத் தொடரை சமன் செய்வதானால் இறுதியில் போட்டியை நாம் வென்றாக வேண்டும் அது அடுத்துவரும் ஒரு நாள் தொடருக்கு சிறப்பாக இருக் கும் என்றார். ஸ்மித் இப்போட்டியில் ஆட்டமிழக்காது 67 ஓட்டங் களைப்பெற்றார். அவர் இங்கிலாந்தின் மார்க்கஸ்ரெஸ் கொதிக், மத்தியூ ஹோகாட் இருவரையும் 5 ஆம் நாளின் பெரும் வெற்றி வீரர்கள் என்று பாராட்டியுள்ளார்.

# நடைபெறவுள்ள அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் இங்கிலாந்து தனது பலத்தை நிரூபிக்கும் ரொய் கூலி



இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் பந்து வீச்சு பயிற்சியாளர் ரொய் கூலி இங்கிலாந்து அணி அவுஸ்திரேலியாவுடன் விரைவில் நடைபெறவுள்ள போட்டிகளின் போது தனது பலத்தை நிரூபிக்கும் எனக் கூறியுள்ளார்.

தற்போது தென்னாபிரிக்காவுடனான போட்டிகளில் தனது திறமையை வெளிக்காட்டுவதை அவர் குறிப்பிடுகிறார். சில காலமாக இங்கிலாந்து அணி பின்னடைவைச் சந்தித்திருந்தபோதும் தற்போது வளர்ந்துவரும் இளம்வீரர்களின் திறமையுடன் புதுமெருகுடன் காணப்படுவதாகவும் அவுஸ்திரேலியாவுடன் ஆடும் போட்டிகள் அவுஸ்திரேலியாவுக்கு நெருக்கடி மிகுந்ததாக இருக்கும் என்றார்.

குறிப்பாக மத்தியு ஹோகாட்டைப் பற்றி அவர் குறிப்பிடும்போது 205 ஓட்டங்களுக்கு 12 விக்கெட்டுகளைப் பெற்றிருப்பது அணிக்குத் துணிவைத் தருகிறது என்றும் ஹோகாட் எப்போதும் திறமையானவர் என்றும் தொடர்ந்தும் திறனை வெளிப்படுத்துவார் எனவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அண்மையில் தொடர்ந்து டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றியதால் ஸ்ரிவ் ஹார்மிசன், சைமன் ஜோன்ஸ், அன்ரு பிளின்டொப் ஆகியோர் காயப்பட்டிருப்பது கவலை யளிப்பதாகவும் எனினும் 5 அல்லது 6 வேகப்பந்து வீச்சாளர்கள் அணியில் புதிதாக இடம் பிடித்துள்ளமை சற்று அணிக்கு ஆறுதலளிப்பதாகக் கூறினார்.

# இந்தியா—பாக்.கிரிக்கெட் தொடர் இந்திய அணி இன்று அறிவிப்பு





இந்தியா- பாகிஸ்தான் அணிகள் மோதும் போட்டி அட்வணை இதுவரை வெளியிடப்படவில்லை இந்நிலையில் பாகிஸ்தான் அணியின் இந்திய சுற்றுப்பயண விவரம் மும்பையில் இன்று அறிவிக்கப்படுகிறது.


அவுஸ்திரேலியா, தென்ஆபிரிக்கா அணிகள் இந்தியா வந்த போது பெங்களூர், சென்னை, நாக்பூர், மும்பை, கான்பூர், கொல்கத்தா ஆகிய இடங்களில் டெஸ்ட் போட்டிகள் நடந்தது. இதனால் பாகிஸ்தானுடன் மோதும் டெஸ்ட் போட்டி நடைபெறும் இடங்கள் சுழற்சி முறையில் வாய்ப்பு வழங்கப்படும்.

கட்டாக், அகமதாபாத், மொகாலி, டில்லி ஆகிய நகரங்கள் டெஸ்ட்போட்டிக்கான வாய்ப் பிலுள்ளது. டில்லி கிரிக்கெட் சங்கம் ஒரு நாள் போட்டியை நடத்த விரும்புகிறது. இதனால் பொங்களூருக்கு வாய்ப்பு கிடைக்கலாம்.

சென்னைக்கு டெஸ்ட் போட்டி கிடைக்காவிட்டால் ஒரு நாள் போட்டியாவது கிடைக் குமா? என்று எதிர் பார்க்கப்படுகிறது.




# அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் முன்னணி வீரர்களுக்கு முன்னேற்றம்



அவுஸ் திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில் அந்ரே அகாசி ரெயினர் சுயேட்லரை 6-3,6-1,6-0 என்ற செட் கணக்கில் வென்றுள்ளார். 2003 இல் நடைபெற்ற போட்டியில் 24 வயதான சுயேட்லர் அகாசியை வெற்றி கொண்டார். எனினும் இப்போட்டியில் இவர் படுதோல்வியடைந்தமை ரசிகர்களைப் பெரும் ஏமாற்றத்துக்குள்ளாக்கியுள்ளது. அகாசி வரும் போட்டியில் டெயிலர் டென்ட்டை சந்திப்பார்.இன்னுமொரு முக்கிய வீராங்கனை மரியா சரபோவா பெண்களுக்கான போட்டியில் லின்சேலியை 4-6,6-3,6-0 என்ற செட்டில் வென்றார். செரினா வில்லியம்ஸ் டலி ரன்ட்ரியன்டிபியை வென்று மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

# சுனாமி நலநிதி கால்பந்துப்போட்டி ஷிடேன்,பெக்காம் பங்கேற்பு




சுனாமி நிவாரணத்துக்காக சர்வதேச கால்பந்து வீரர்களை கொண்டு காட்சி கால்பந்துப்போட்டியை நடத்த இந்திய கால்பந்துச் சங்கம் முடிவு செய்துள்ளது. இதற்காக பிரான்சைச் சேர்ந்த ஷிடேன் ,இங்கிலாந்தைச்சேர்ந்த டேவிட் பெக்காம் போன்ற உலகின் தலைசிறந்த வீரர்கள் இதில் கலந்துகொள்ளலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தக் காட்சி கால்பந்துப் போட்டி பெப்ரவரி 2-ஆவது வாரத்தில் கொல்கத்தா,டில்லியில் நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது.

AC மிலான் அணியின் கால்பந்துஅணித் தலைவர் போலோ மல்டினி யுடினிஸ் கழகத்துடனான போட்டிக்கு முன்பு 20 வருடங்களுக்கு முன் இதே அணியுடன் முன்பு போட்டியிட்டதை நினைவு கூருகிறார்.



## சிந்தனைக்கு



நாம் உறுதியுடன் தொடர்ந்தும் போராடுவோம்; எமது தாயக பூமியை எதிரியிடமிருந்து மீட்டெடுத்து சுதந்திரத் தமிழீழம் அமைக்கும் வரை நாம் தொடர்ந்து போராடுவோம்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 20-01-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## நிரம்பியுள்ள சட்டைப் பை!

சுனாமிப்பேரலைகள் சகல இன மக்களுக்கும் துன்பத்தையும், துயரத்தையும் கொடுத்ததாயினும் மறு புறத்தில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கும் அவரது அரசாங்கத்திற்கும் நன்மையையே கொடுத்தது என்றால் அது மிகையாகாது என்றார் ஏனெனில் சந்திரிகா குமாரதுங்க அரசாங்கம் சுனாமிக்கு முன்பிருந் ததைவிடத் தற்பொழுது பலப்பட்டுள்ளது என்பதே உண்மையாகும்.

சந்திரிகா குமாரதுங்க அரசாங்கம் பலப்பட்டுள்ளது என்பன அமெரிக்க டொலரின் பெறுமதிக்கு எதிரான இலங்கை ரூபாவின் மதிப்பு அதிகரித்துள்ளமையே வெளிக்காட்டப் போதுமானதாகும். அதாவது சுனாமி விளைந்த அனர்த்தத்தை அடுத்து கிடைக்கப் பெற்ற பெருமளவிலான வெளிநாட்டு உதவிகள்ரூபாவின் பெறுமதியை அதிகரிக்கச் செய்துள்ளதெனலாம்.

சிறிலங்கா ரூபாவின் பெறுமதி கடந்த பல ஆண்டுகளாக வீழ்ச்சிப் போக்கிலேயே சென்று கொண்டிருந்தது. நாட்டில் யுத்த நிறுத்தம்- சமாதானம் நிலவியபோதும்கூட இதனைக் கட்டுப் படுத்த முடியாதொரு நிலையே உருவாகியிருந்தது. இதனால் நாட்டின் பொருளாதாரமும் பெரும் நெருக்கடிக்கும் உள்ளாகியிருந்தது.

ஆனால் சுனாமி பேரலைகளின் தாக்கத்தினால் அழிந்த நாட்டைக் கட்டி எழுப்புவதற்கு வெளிநாடுகளிலிருந்து கிடைக்கப் பெற்ற உதவிகள் நாட்டின் பொருளாதாரத்திற்குப் புது இரத்தம் பாய்ச்சியது போன்றதாகியது. இந்நிலையில்தான் பொருளாதாரம் உறுதியான நிலை கொண்டதாகியுள்ளது.

இந்த வகையில் சுனாமிப் பேரலையின் தாக்கமானது சிறிலங்காவிற்குப் பொருளாதார ரீதியில் ஏற்பட்டிருந்த முட்டுக் கட்டைகள், இடையூறுகள் என்பனவற்றைத் தற்காலிகமாக வேனும் இல்லாது போகச் செய்தது என்றே கூறலாம். அதாவது சிறிலங்கா அரசிற்கு அனர்த்தத்தின் பெயரால் நிபந்தனையற்ற விதத்தில் நிதியுதவி அளிக்க நாடுகள் முன்வந்தமையானது சந்திரிகா அரசின் சட்டைப் பைகளை நிரப்பியுள்ளது என்றே கூறலாம்.

இதற்கு முன்னதாக சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படும் பட்சத்திலேயே சிறிலங்கா அரசிற்கு நிதியுதவி அளிக்கப்படும் என சிறிலங்காவிற்கு உதவி வழங்குவோர் கூறி வந்தனர். டோக்கிய மாநாட்டில் ஒதுக்கப்பட்ட 45000 கோடி ரூபா கூட சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டால் மட்டுமே வழங்கப்படும் என அவர்கள் தெரியப்படுத்தியிருந்தனர்.

ஆனால் சுனாமியை அடுத்து இத்தகைய நிபந்தனைகள் எதுவும அற்ற விதத்தில் நிதியுதவிகள் கிடைக்கப் பெறுகின்றமையானது சிறிலங்காவை அழிவிலிருந்து மீட்டெடுப்பதற்கு மட்டுமல்ல சிங்கள ஆட்சியாளர்களின் சிந்தனைப் போக்கிற்கேற்ப செயற் படவும் வாய்ப்பு ஒன்றையும் உருவாக்கியுள்ளது என்றே கூறலாம்.

அதாவது சிறிலங்கா ஆட்சியாளர்கள் யுத்த நிறுத்தம்: சமாதானப் பேச்சுவார்த்தைகள் என்பனவற்றில் அக்கறை செலுத்தியமைக்கு முக்கியமான் காரணிகளில் ஒன்று அரசு சந்தித்தபொருளாதார நெருக்கடியாகும். பொருளாதாரம் நல்ல தொரு நிலையில் அதாவது தாக்குப் பிடிக்கும் நிலையில் இருந்திருப்பின் சிறிலங்கா அரசாங்கம் யுத்த நிறுத்தம் செய்யவோஅன்றி சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றதொரு நிலைக்கோ சென்றிருக்கமாட்டாது.

தற்போது சுனாமியின் அனர்த்தத்தினால் மக்கள் துன்புற்று அகதிகளாகியுள்ள போதும் அரசாங்கம் திடீரென வளம் பொருந்தியதாகியுள்ளது. குறுகிய காலத்திற்கெனினும் அதன் சட்டைப் பைகளில் பணம் இருக்கவே செய்யும். இந் நிலையில் அரசாங்கம் மீண்டும் தனது பழைய நிலைப்பாட்டிற்குத் திரும்பிச் செல்ல மாட்டாது எனக் கூறுவதற்கில்லை.

இதனை வெளிப்படுத்துமாப்போன்றதாகவே அரசாங்கத்தின் சில நடவடிக்கைகளும் உள்ளன. குறிப்பாக தேவையற்ற வேளையில் அவசரகாலச் சட்ட அமுலாக்கம் நிவாரணம் மற்றும் புனர் நிர்மாணப் பணிகளில் இராணுவத்தின் தலையீடு இவற்றிற்கும் மேலாக நவீன ஆயுத தளபாடக் கொள்வனவிற்கென வெளி நாடுகளுக்கு சிறிலங்கா இராணுவ உயர் மட்டக் குழு விஜயம் போன்றவை அமைந்துள்ளன.

இவை விடுதலைப்புலிகளினாலும் உணரப்பட்டவையாகவே உள்ளன. இதன் வெளிப்பாடாகவே அண்மையில் தம்மை சந்திக்கும் வெளிநாட்டு இராஜதந்திரிகள் மட்டத்தில் இது தொடர்பான தமது கவலையையும் எதிர்காலத்தில் இதனால் விளையக் கூடிய ஆபத்துக்களையும் சுட்டிக் காட்டத் தொடங்கியுள்ளனர். அதாவது இலங்கையில் சமாதானம் நிலவவேண்டும் என விரும்பும் நாடுகள் சுனாமி அனர்த்தத்திற்கென வழங்கும் நிதியுதவிகள் சமாதானத்திற்கு மாறாக பயன்படுத்தப்பட்டு விடக்கூடாது என்பதில் கவனமாக இருத்தல் வேண்டும். இல்லாவிடில் இலங்கையில் விரைவிலேயே பாரிய நெருக்கடி ஒன்று தோன்றக் கூடிய வாய்ப்பு உண்டு என்பது நிராகரிக்கப்பட முடியாததாகிவிடும்.

# சுனாமியால் இறந்தோர் குறித்து முரண்பாடான தகவல் வழங்கும் அரசு

தமிழர் தாயகப்பகுதிகள் அடங்கலாக இலங்கைத்தீவில் சுனாமி இயற்கை பேரனர்த்தத்தால் இறந்தோர் தொகை குறித்து சிறிலங்கா அரசுக்குள் முரண்பாடான நிலை தோன்றியுள்ளது. இறந்தோர் தொகையை சிறிலங்கா மக்கள் பாதுகாப்பு அமைப்பு திங்களன்று சடுதியாக 7 ஆயிரத்தால் அதிகரித்து சுனாமியால் இலங்கைத் தீவில் இறந்தோர் தொகை 38,195 என அறிவித்தது.

இத்திடீர் அதிகரிப்பு பல மட்டங்களிலும் அதிர்வலை களை ஏற்படுத்தியது. எங்கிருந்து இத்திடீர் எண்ணிக்கை வந்தது என்ற கேள்வி எங்கும் எழுந்தது. பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணங்கள் குறித்த பல்வேறு அறிவித்தல்களும் வெளியிடப்பட்டு வரும் நிலையில் இவ்வெண்ணிக்கை அதிகரிப்பு பல்வேறு சந்தேகங்களை வேறு பலரிடமும் எழுப்பியது. இந்நிலையில் செவ்வாய், சிறிலங்கா சனாதிபதியின் கீழ் இயங்கும் தேசிய நடவடிக்கைகளுக்கான மையம், ஒருவர் இறப்பு இருமுறை கணக்கில் கொள்ளப்பட்டது, பல்வேறு அமைப்புக்கள் ஒரே தகவலைத் திரட்டியது போன்ற காரணங்களே இவ்வாறு எண்ணிக்கை திடீரென உயர்ந்ததிற்கு காரணம், ஆனால் இறந்தோர் தொகை 30,920 ஆகவே தொடர்ந்தும் இருக்கின்றது என செய்தி வெளியிட்டுள்ளது. இத்தொகையில் இறப்பு உறுதிப் படுத்தப்படாமல் காணாமல் போனோர் என பட்டியலிடப்பட்டோரையும் இறப்பிற்கான பட்டியலில் உள்ளடக்கியது என மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை உள்ளகத்தகவல்களின் படி இறந்தோர் தொகை 25,898 என சிறிலங்கா இராணுவ வட்டாரங்களை மேற்கோள்காட்டி பிறிதொரு செய்தி வெளியாகியுள்ளது. அத்துடன் சுனாமி இயற்கை பேரனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு 10 இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர் எனத் தெரிவித்து வந்த சிறிலங்கா அரசு தற்போது இடம்பெயர்ந்து தங்கியுள்ளோர் 4,31,224 பேரே என அறிவித்துள்ளது. பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணங்களை நிவாரண அட்டை மூலம் வழங்கப்படும் என்ற அறிவுறுத்தலும் தற்போது வெளியாகியுள்ளது. இதேவேளை மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திலக் ரணவீர வடக்கு, கிழக்கில் இறந்தோர் தொகை 8 ஆயிரம் என்றும் அத்தொகை மேலும் அதிகரிக்கலாம் எனவும் தெரிவித்துள்ள கருத்து மேலும் குழப்பங்களை வலுப்படுத்தியுள்ளது. அம்பாறை மாவட்டத்தில் மட்டும் 11 ஆயிரம் பேரின் இறப்பு ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், நிவாரணங்களில் பாகுபாட்டை கைக்கொள்ளவே சிறிலங்கா அரச மட்டத்தில் பல்வேறு புள்ளிவிபரங்களும் வெளியிடப்பட்டு, வேண்டுமென்றே குழப்பங்கள விளைவிக்கப்படுகின்றனவா? என்ற சந்தேகம் நிவாரண அமைப்புக் களிடம் ஏற்பட்டுள்ளதாக அறியப் படுகின்றது. அத்துடன் இதுவரை 58 நாடுகளிலிருந்து 255 விமானங்களில் உடனடி நிவாரணப் பொருட்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும், பல கப்பல்களிலிருந்து பெருமளவு நிவாரணப் பொருட்கள் இறக்கப்பட்டுள்ளதாகவும், இவற்றின் விபரம், இவை பகிர்ந்தளிக்கப்பட்ட முழுமையான விபரம் என்பதைக் கூட அறிய முடியாமல் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## போலந்துப் பிரதமர் சனாதிபதியுடன் சந்திப்பு

போலந்து நாட்டின் பிரதமர் மெரிக்மல்கா உள்ளிட்ட குழுவினர் நேற்று இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர்.

தென்பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை இவர்கள் பார்வையிட்டதுடன் சனாதிபதியையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்

## புதுக்குடியிருப்புப் பகுதியில் வீதி விபத்தில் இருவர் படுகாயம்

புதுக்குடியிருப்பில் இடம்பெற்ற வீதி விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர். இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது; நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் புதுக்குடியிருப்பு முல்லை வீதியில் துவிச்சக்கர வண்டியில் பயணம் செய்த இருவர் மீது சிவன் கோயிலுக்கு அருகாமையில் கண்டர்ரகவாகனம் மோதியுள்ளது.

இதில் சுதந்திரபுரம் உடையர்கட்டைச்சேர்ந்த 24 வயதுடைய சின்னத்தம்பி கனகராசா என்பவரும் 30 வயதுடைய நாயகம் என்பவரும் காயமடைந்து புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நடந்த இடத்திற்கு விரைந்த காவல்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (08)

## சுனாமியால் அ.அ.இழந்தோர் சுபார்சுக்கடிதம் கொண்டுவருக

### இராணுவம் அறிவிப்பு

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப்பகுதியைச் சேர்ந்த சுனாமி பேரலைகளினால் பாதிக்கப்பட்டு தமது ஆள் அடையாள ஆவணங்களை இழந்தவர்கள், ஓமந்தை இராணுவச் சோதனைச்சாவடி ஊடாகப் பிரயாணம் செய்யும்போது தமது ஆளடையாளத்தை உறுதி செய்யும் கடிதம் ஒன்றை கிராமசேவகர் போன்ற உரிய அரச அதிகாரிகளிடமிருந்து பெற்று வருமாறு ஓமந்தை இராணுவ சோதனைச் சாவடியைச் சேர்ந்த இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.

இதேவேளை முல்லைத்தீவு, கிளிநொச்சி உட்பட வடபகுதிக்கு பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக நிவாரண பொருட்களைக் கொண்டு செல்பவர்கள், தாங்கள் கொண்டு செல்லும் பொருட்களின் விபரங்கள் அடங்கிய பட்டியல் ஒன்றைக் கொண்டு வருமாறு கேட்கப்பட்டுள்ளது. (21)

# தொழிலற்ற பட்டதாரிகளை பயிற்சிக்காக பணிக்கமர்த்தல்-2005 பட்டியல் 11

வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு செயலாளரினால் கிளிநொச்சி கல்வி வலயத்திற்கு தொழிலற்ற பட்டதாரிகளை பயிற்சிக்காக பணிக்கமர்த்தல் நிகழ்ச்சித்திட்டதின் கீழ் மேலும் 36 பட்டதாரிப் பயிலுனர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

இவர்கள் அனைவரும்தத்தமது நியமனக் கடிதங்களைப் பெறுவதற்காக நாளை வெள்ளிக்கிழமை (விடுமுறை நாள்) காலை 09.00 மணிக்கு கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்திற்கு சமூகமளித்து தத்தமது நியமனக்கடிதங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.ப. அரியரத்தினம் கேட்டுக் கொள்கின்றார்.எஸ்.என்.பொன்ராணி,102,சிவன்கோவில் வடக்கு வீதி, யாழ்ப்பாணம்.ரி. ஜெயலக்ஷ்மி, சேர் பொன் இராமநாதன் வீதி, நாச்சிமார் கோவிலடி, தாவடி,கொக்குவில்.எஸ்.சுனீத்ரா, 54, சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.ரி.தவவாசுகி, பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்கே. பிரபாஞ்சலி, 46,1ஆவது ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.பி.யாழினி, 57, 1ஆவது ஒழுங்கை அரசடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.ரி.தயாளினி, மே/பா: சந்திரன் பான்சி பகடி, நவாலி வீதி, ஆனைக்கோட்டை.கே.தவமலர், இந்திரபவனம், துலக்காடு, வதிரி, கரவெட்டி.எஸ்.இராஜலக்ஷ்மி, புத்தூர் மேற்கு, புத்தூர்.ஆர். மதிரூபன், ஏ.கே.ஆர்.மில் ஒழுங்கை, உனாலி மேற்கு சுன்னாகம்.எஸ். இளங்கோதை இந்துக் கல்லூரி ஒழுங்கை, உரும்பிராய் வடக்கு உரும்பிராய்.பி. சுதர்சினி, கணேஸ்வரம், அளவெட்டி கிழக்கு, அளவெட்டி.எஸ்.கமலாம்பிகை, மே/பா: ஏ. துரைசாமி, கோப்பாய் தெற்கு கோப்பாய்.எஸ்.சிவயோகினி, மே/பா:வி.கருணாமூர்த்தி, 66,நந்தாவில் ஒழுங்கை, கொக்குவில்.வி.பாலமதி, செம்பியன்பற்று தெற்கு, தாழையடி.கே.சச்சிதானந்தன், ஆழியவளை,தாழையடி.ரி.விஜயமனோகர், பாடசாலைவீதி ஆழியவளை, தாழையடி, யாழ்ப்பாணம்.கே.சுதர்சன், குடத்தனை மேற்கு, குடத்தனை.ரி.மனோகரன், மருதங்கேணி தெற்கு, தாழையடி.எஸ். சந்திரகுமார், செம்பியன்பற்று தெற்கு, தாழையடி.ரி.ஞானநந்தன், செம்பியன்பற்று தெற்கு செம்பியன்பற்று தாழையடிஎம்.மரியராசா, வெற்றிலைக்கேணி, முள்ளியான்.எஸ். ராஜ்குமார், செம்பியன்பற்று தெற்கு,தாழையடி. எஸ். மரிஸ்ரெலா,செம்பியன்பற்று தெற்கு, தாழையடி. கே. கலாரஞ்சினி,செம்பியன்பற்று தெற்கு, தாழையடி.எஸ்.வதனா, நாகர்கோவில் தெற்கு, நாகர்கோவில்.பி.சுதாஜினி, நாகர்கோவில் தெற்கு நாகர்கோவில்.எஸ். சிவமாலதி, அம்பன் குடத்தனை.எஸ். சிதம்பரநாதன், குடத்தனை வடக்கு, குடத்தனை. பருத்தித்துறைஎப். மைக்கல் ஆன்சலோ, முருகன் இல்லம், இன்னம்பலை, பருத்தித்துறை. வி.இராஜலிங்கம், வெற்றிலைக்கேணி, முள்ளியான், யாழ்ப்பாணம்.கே.ஆனந்தவாணி, வத்திராயன் தெற்கு, தாழையடி.எஸ்.சுதாகரன், வெற்றிலைக்கேணி, முள்ளியான்.ரி.விஜேந்திரன், மே/பா: ஐ.சிற்றம்பலம், வட்டுத்துறை வடக்கு தாழையடி.ஜி.ஜெயராஜினி, செம்பியன்பற்று வடக்கு செம்பியன் பற்று. என்.கண்ணகுமார், புலோலி தெற்கு புலோலி.

# மீள் கட்டுமானப் பணிகள் குறித்து விசேடதிட்டம் ஒன்றும் அரசிடமில்லை

## ஜே.வி.பி. அமைச்சர் லால்காந்த குற்றச்சாட்டு

சிறிலங்கா அரசிடம் இன்னமும் புனர்நிர்மாண மற்றும் மீள் கட்டுமானப் பணிகளை திறம்படச் செய்வதற்கு கிடைக்கக்கூடிய வளங்களை சரியான முறையில் பயன்படுத்தக்கூடிய விசேட திட்டம் எதுவும் கைவசம் இல்லை என ஜே.வி.பி. அமைச்சர் லால் காந்த நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

முக்கிய பெரிய வர்த்தகர்களிடம் ஆழிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் புனர்நிர்மாண மற்றும் மீளமைப்பு கட்டுமாணப் பணிப் பொறுப்புக்களை ஒப்படைக்க எடுத்த அரசின் முடிவை எதிர்த்து அரசில் அங்கம் வகிக்கும் கூட்டணிக் கட்சிகளில் ஒன்றான ஜே.வி.பி அமைச்சரான கே.டி. லால் காந்த தனது கண்டனத்தை தெரிவித்தார். இது பற்றி அமைச்சர் மேலும் தெரிவித்த விபரங்கள் வருமாறு: இப் பணிகளை ஏற்றுகொள்ளவிருக்கும் வர்த்தகர்கள், கூறி யதை செய்யும் வெறும் சோம்பேறித்தனம் பிடித்தவர்கள் இவர்கள் அரசினை படுகுழிக்குள் தள்ளுவதை தவிர வேறு எதனையும் சரியாக செய்யத் தெரியாதவர்கள். படையினரும் ஜே.வி.பி கட்சித் தொண்டர்களும் உடனடி நிவாரண நடவடிக்கைகளில் இறங்கியிராவிடில், தொற்று நோய்களின் வடிவில் நாடு இன்னொரு பெரும் பேரழிவினை எதிர்நோக்கியிருக்கும். அரசின் புதிய கொள்கையால், இவ்வாறு உடனடி நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் தற்போது புனர்நிர்மான மற்றும் மீள் கட்டுமாண பணிகளில் ஈடுபடமுடியாமலும் இருக்கின்றது. கிராமங்களை மையமாக கொண்ட எத்தனையோ தொழிலதிபர்கள் இப் பணிகளில் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை செய்யக்கூடிய நிலையில் இருக்கும்போதும், அனைத்து கட்சிகளின் ஒற்றுமையாக பணியாற்ற கோரிக்கை விடுத்துகொண்டும், அரசு சோம்பேறித்தனம் பிடித்த பெரும் வர்த்தகர்களை நாடியிருப்பதுஏன்என்று தெரியவில்லை. ரயில்வே வர்த்தக யூனியன் உறுப்பினர்கள் புகையிரத பாதைகளை சீரமைக்க ஒரு நாளைக்கு 12 மணித்தியாலங்கள் என்ற கணக்கில் சிரமப்பட்டுக் கொண்டிருக்க, ரயில்வே அமைச்சரும் அவரது பிரதி அமைச்சரும் இன்னொரு பக்கம் தங்களை விளம்பரப்படுத்துவதிலேயே முக்கியமாக ஈடுபட்டிருந்தனர் என்பதனையும் அவர் சுட்டிக்காட்டினார்.

### படையினரின்...

நீதியான விசாரணை நடத்தக் கோரியும் பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டதால் படையினருக்கும் பொது மக்களுக்கும் இடையில் கைகலப்பு இடம்பெற்றது. துப்பாக்கயை நீட்டி சுட முற்பட்ட இரண்டு படையினர் பொதுமக்களின் தாக்குதலில் தலையில் காயமடைந்தனர். இராணுவ புதிய பிக்கப் ஒன்றும்,ஜீப்ஒன்றும் அத்துடன் படையினர் மறைந்து பயணம் செய்த லொறி ஒன்றும் கல்லெறிக்கு இலக்கானதுடன் கண்ணாடிகள் அனைத்தும் உடைக்கப்பட்டன. கொடிகாமத்திலிருந்து மிருசுவில் வரை பொது மக்கள் வீதித்தடைகளை ஏற்படுத்தியதுடன் படையினரின் வாகனங்களையும் வரவிடாமல் தடுப்பு ஏற்படுத்தி இருந்தனர் சாலையின் பல இடங்களில் டயர்கள் எரிக்கப்பட்டதுடன். பொது மக்கள் படையினரின் இத்தகைய நடவடிக்கைகளை தொடர்கின்ற பொழுது இத்தகைய சம்பவங்களை நிறுத்த முடியாது என தெரிவித்துள்ளனர். பிரதான சாலைகளில் மக்களின் போக்குவரத்துக்கு பாதிப்பு ஏற்படாத வண்ணம் பார்த்துக்கொள்ளப்பட்டதுடன், நீதி கிடைக்காத பட்சத்தில் தொடர்ந்தும் பல போராட்டங்களை முன்னெடுக்க மக்கள் தயாராக இருப்பதாக தெரிவித்தனர். (28,41)

### ஈ.பி.டி.பி...

தலைவர்களும், விடுதலைப் புலிகளின் தமிழீழ நிர்வாக சேவையின் யாழ்.மாவட்ட பொறுப்பாளர் க.விஜிதரனும் கலந்து கொண்டிருந்தனர்.

பிற்பகல் 3 மணிக்கு யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் தலைமையில் அவரது அலுவலகத்தினில் இக் கூட்டம் ஆரம்பமாகியிருந்தது. இந் நிலையில் ஈ.பி.டி.பி அமைப்பின் முக்கியஸ்தரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ந.மதனராஜா சக உறுப்பினர் ஒருவர் சகிதம் அங்கு வருகை தந்திருந்தார். சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவர்களால் நியமிக்கப்பட்டுள்ள அவசர சேவைக் குழுவின் செயலாளராக ந.மதனராஜாவே நியமிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

இந் நிலையில் விடுதலைப்புலிகளின் தமிழீழ நிர்வாக சேவையின் பிரதிநிதிகளை அக் கூட்டத்தினில் கலந்துகொள்ள அனுமதிக்கக் கூடாதென ந.மதனராஜாவால் கோரிக்கையொன்று அரச அதிபரிடம் முன்வைக்கப்பட்டது.

எனினும் அங்கு குறுக்கிட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே.சிவாஜிலிங்கம் இலங்கை சனாதிபதியே ''விடுதலைப் புலிகளையும் இணைந்தே புனர்வாழ்வுப் பணிகளை தற்போது முன்னெடுக்க வேண்டுமெனக் கூறி வருகின்றார்'' இந் நிலையில் விடுதலைப்புலிகள் பிரதி நிதிகளும் அங்கு கலந்து கொள்ள வேண்மென வலியுறுத்தினார்.

இதனையடுத்து இருவருக்குமிடையே வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றது. பாராளுமன்ற உறுப்பினர் கே.சிவாஜிலிங்கத்திற்கு ஆதரவாக சக பாராளுமன்ற உறுப்பினர் மா.ஈழவேந்தனும் குரல் எழுப்பினார்.

இதனையடுத்தே ஈ.பி.டி.பி பிரதிநிதிகள் அங்கிருந்து வெளிநடப்புச் செய்தனர் எனினும் திட்டமிட்டவாறு அக் கூட்டம் இடம் பெற்றதுடன் முக்கியமான முடிவுகள் பலவும் எடுக்கப்பட்டிருந்தது. (27)

### சுனாமியால்...

டுள்ளோம். இது சம்பந்தமாக தமிழ்ச்செல்வனுடன் கலந்துரையாடியுள்ளோம். நாம் எதிர்காலத்தில் என்ன செய்ய வேண்டும் என்பதை எமது உயர்ஸ்தானிகர் காரியாலயம் வெக விரைவில் தீர்மானங்களை எடுக்கும். புனர்வாழ்வு மீள்கட்டுமானங்கள் கட்டுவதையும் மக்களை மீண்டும் குடி அமர்த்துவதுடன் அதற்கான நடவடிக்கைகள் யாவற்றையும் மேற்கொள்ளப்போகிறோம்.

எல்லா மக்களையும் ஒன்றிணைப்பதற்கு எம்மால் இயன்ற முயற்சிகளை மேற்கொள்ளப் போகிறோம். இது ஒரு பயனுள்ள நீண்டநேர பேச்சுவார்த்தையாக அமைந்துள்ளதைப் பற்றி மகிழ்ச்சியடைகின்றேன் என்றார்.

நேற்று மாலை 1.30 மணிக்கு விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் ஐக்கிய நாடுகள் சபையின் உதவி ஆணையாளர் கிமால்மொஜானி ஐக்கிய நாடுகள் சபையின் உலக பாதுகாப்புப் பணிப்பாளர் எரிக்பெளர் ஐக்கிய நாடுகள் சபையின் ஆசிய அபிவிருத்திப் பணிப்பாளர் ஜொனட்லிம்ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர்சபை அவசர இணைப்பாளர் நெல்லிரைட், ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர்சபை உதவி பிரதிநிதி மஸ்டி நொட்ஸ் ஐக்கிய நாடுகளும் உயர்ஸ்தானிகர்சபை நிறைவேற்று உதவி ஆணையாளர் ஜமால் அரபாத் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச.சோ)

# பதிவை மேற்கொள்க

(பூநகரி)

பூநகரி பிரதேச அரசியற் துறைக்குட்பட்ட வர்த்தகர்களும் உழவு இயந்திர உரிமையாளர்களுக்கு தங்கள் சங்கங்களின் சட்ட திட்டங்களிற்கமைய நடக்க வேண்டும் எனவும் இதற்கமைய அரசியல்துறையில் பதிவை மேற்கொள்ளுமாறு பூநகரி பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் ஈகைவேந்தன் அறிவித்துள்ளார். (34)

### சுனாமி அனர்த்த...

மேற்படி நிதியத்திற்கான பணத்தினை தங்கள் கைகளில் நேரடியாகக் கையளிக்க வேண்டும் என்ற எனது எண்ணம் இன்று நிறைவேறியதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேனென பணத்தை வழங்கி விடைபெற்றுச் செல்கையில் திருநாவுக்கரசுஅவர்கள் தெரிவித்தார்.

### சுனாமிஅனர்த்....

களிலிருந்து வெளியாகியுள்ள தகவல்கள் தெரிவிக்கின்றன.

மிகுதித் தொகை அச்சடிக்கப்பட்ட பின்பு அனுப்பிவைக் கப்படுமென தங்களிற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மட்டக்களப்பில் சுமார் மூன்று இலட்சம் பேருக்கு நிவாரண முத்திரைகள் வழங்கப்பட வேண்டும். ஆனால் 70 ஆயிரம் குடும்பங்களிற்கு மட்டுமே அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.இதே நிலைமையே அம்பாறை மாவட்டத்திற்கும் தேவைப்படும் முத்திரைகளின்தொகை ஒரு இலட்சத்து 90 ஆயிரம் ஆனால் 50 ஆயிரம் முத்திரைகள் மட்டுமே அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இதனால் இவ் முத்திரைகளை எதனடிப்படையில் பகிர்ந்தளிப்பதென தெரியாதுள்ளதாகவும்,மிகுதி வரும் வரை காத்திருப்பதா அல்லது கிடைத்த முத்திரைகளைக் குறிப்பிட்டகுடும்பங்களிற்கு பகிர்ந்தளிப்பதா? என குழப்பத்தில் இருப்பதாக சிவில் அதிகாரிகள் பலர் தெரிவித்துள்ளனர்.

# தேங்காய் ஏற்றிச்சென்ற வாகனம் மரத்துடன் மோதியது

## இருவர்படுகாயம்

தேங்காய் ஏற்றிச் சென்ற கன்டர் ரக வாகனம் கட்டுப்பாட்டை இழந்து மரத்தில் மோதியதால் இருவர் படுகாயமடைந்தனர். நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாநோக்கிச் சென்று கொண்டிருந்த கன்டர் ரக பாரவூர்த்தி புளியங்குள இராணுவத் தடைமுகாமைத் தாண்டுவதற்காக அதிகமான வேகத்தில் பயணித்த



வேளை கட்டுப்பாட்டை இழந்து வீதியோரமாக நின்ற மரத்துடன் மோதியது இதன்போது இவ்வாகன ஓட்டுனரும் உடன் பயணித்தவரும் படுகாயமடைந்துள்ளனர். படுகாயத்திற்குள்ளான கரன்,மற்றும் திருகோணமலையைச் சேர்ந்த இன்பராசா கிருபாகரன் ஆகிய இருவரும் கிளிநொச்சி மாவட்ட மருத்துமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதேவேளை கரன் என்பவரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதாகவும் தெரியவருகிறது.

## -படையினரின் வாகனம் மோதி-

# பலியானவரின் குடும்பத்தினர் ம.உ.ஆ.குழுவிடம் மகஜர்

சிறிலங்காப் படைகளின் வாகன் மோதி பலியான மிருசுவிலைச் சேர்ந்த வையிரவன் நடேசனின் குடும்பத்தினர் நேற்றுக் காலை எட்டு மணியளவில் யாழ்ப்பாண மனித உரிமை ஆணைக்குழுவின் அலுவலகத்தில் நீதி கோரியும், பாதுகாப்புக் கோரியும் மற்றும் உரிய இழப்பீட்டுத் தொகையை உடனடியாக வழங்கக் கோரும் கோரிக்கை மனு ஒன்றை கையளித்துள்ளதாக தெரிய வருகிறது. மிகவும் வறுமையான குடும்பச் சூழலில் வாழ்ந்து வந்த இக் குடும்பம் தற்பொழுது துணையற்று மிகவும் கவலைக்கிடமான நிலையில் இருப்பதுடன் கூலிவேலை செய்து பிழைப்பு நடத்திவரும் இக் குடும்பம் இன்று நிர்க்கதி நிலையைச் சந்தித்து இருப்பதாகவும் ஏற்கனவே இக் குடும்பத்தில் இருவரை சிறிலங்காப் படைகள் கடந்த சில வருடங்களுக்கு முன்னால் வெட்டிக் கொன்றுள்ளார்கள் என்றும் மிருசுவில் கொலை வழக்கு நடைபெற்றுவரும் நிலையில் உடனடியாக இழப்பீட்டுத் தொகையை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. (28)

### சுனாமியால் பாதிப்...

போயாகொட மற்றும் குழுவினரும் நேற்று விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்திற்கு நேரில் விஜயம் மேற்கொண்டு வழங்கினர்.

இவற்றைத் தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கனிடம் முன்னால் சகாரவர்த்தனாக் கப்பல் கப்டன் போயாகொட கையளித்தார்.

மேற்படி பகுதிக்கென சிலிங்கோ நிறுவனத்தினால் வழங்கப்பெற்ற 5 உழவு இயந்திரங்கள், இழுவைப்பொருட்கள் என்பன வவுனியாவில் வைத்து தடுக்கப்பட்டுள்ளதால் அவற்றை உடன் எடுத்துவர முடியவில்லையென மேற்படி குழுவினர் தெரிவித்துள்ளனர். (சோ,ச)

### அடுத்து...

பேதங்களை மறந்து ஒன்றிணைந்துள்ளனர்

சில சில இடங்களில் இன்னமும் சிறு பிரச்சினைகள் காணப்படுகின்றன. சிலவார்த்தைகளை வைத்துக்கொண்டு வடக்கில் உள்ளவர்களுடன் பேசக்கூடாது எனத் தென்னி லங்கையில் சிலர் கூறுகின்றார்கள். உங்களுடைய நிவாரணம் தேவை யில்லை அதனை நாங்களே பகிரவேண்டும் என வடக்கிலுள்ளவர்கள் கூறுகிறார்கள் எனவே இவ்வாறான எண்ணங்கள் கைவிடப்படவேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

அத்துடன் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கை அரசு தனது அவசர மீள் கட்டுமானப் பணிகளை ஆரம்பிக்கும் திட்டத்தை மிகவும் விரைவில் தீட்டிமுடித்துள்ளது. சுனாமிக்கு முன்பிருந்ததைவிட சிறந்ததொரு நாடாக இலங்கையை கட்டியெழுப்ப முன்வருமாறும் கோரியுள்ளார்.

இன்னும் 3 நாட்களே உள்ளன! விரையுங்கள்!

Mega

கொம்ப்யூட்டர் உயர் கல்விக்கான புலமைப்பரிசில் பரீட்சை

23-01-2005 ஞாயிறு

இலவச அனுமதிகளுக்கு

கணினியியல் கல்லூரி

(Affiliated to Asian)

யாழ்சாலை, கிளிநொச்சி.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு சனவரி மாதம் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது